# இளம்பரிதி
## 2007

இதழ் 03



வெளியீடு
விடுதி மாணவர் ஒன்றியம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

# இளம்பரிதி

## இதழ் 03

# 2007

இதழாசிரியர்

ப. சுஜந்தன்

**வெள்ளத் தனைய மலர்நீட்டம்**
**மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு**

# நிர்வாகக்குழு

**விடுதிக் காப்பாளர்**

Dr. M.M. Mahusoon
Mrs. C.G.S. Devadason

**உபவிடுதிக் காப்பாளர்**

திரு B. ராதேஸ்
திரு R. சகாயசீலன்
செல்வி M. சுபோஜினி
செல்வி S.சந்திரகுமாரி
S.சாமினி

**தலைவர்**

ந. ரஜீந்திரபவன்
அனுசாங்கி

**உபதலைவர்**

K. மனோகரதாஸ்
S. ஜதர்சினி

**செயலாளர்**

மு. செல்வக்குமார்
கௌசல்யா

**உபசெயலாளர்**

P. பிரபாகரன்

**பொருளாளர்**

திருக்குமரன
T. கம்ஹானந்தினி

**பத்திராதிபர்**

ப. சுஜந்தன்

**பிரதிநிதிகள்**

V.குபேந்திரன்
T. சந்திரபவன்
L. லுஜந்தன்
S. கோவர்த்தனன்
K. சுதர்சன்
A. ஆயிஷா
K.ஜெயவதனி
V. மாதரசி
S. பத்மயோதி
C.A நிரோசினி

**சிற்றுண்டி மேற்பார்வையாளர்**

மு. நவதீபன்

**அட்டைப் படம்**

திரு. இரா. கிருபைராஜா
விரிவுரையாளர்
புவியியல் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

**தட்டச்சு**

த. அருண்மாறன்
க. நிர்மலகாந்தன்

**கணினி வடிவமைப்பு**

ந. ரஜீந்திரபவன்

**அச்சுப்பதிப்பு**

வணசிங்கா அச்சகம்
196/1 திருமலை வீதி
மட்டக்களப்பு
தொ. பே. 0602650361

# உப வேந்தரின் வாழ்த்துச் செய்தி

தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு

மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் அதிகம் சுரக்கும். அது போல் தொடர்ந்து கற்கும்போது அறிவு பெருகும். பல்கலைக் கழக மாணவர்கள் தங்கள் அறிவைப் பெருக்குவதன் ஒரு பகுதியாக சஞ்சிகைகளை வெளியிடுவது வழக்கம். அந்த வகையில் கிழக்குப் பல்கலைக் கழக விடுதி மாணவரின் வெளியீடாகிய இளம்பரிதி இதழ் இந்த ஆண்டும் வெளிவருவதில் மகிழ்ச்சியடைகிறேன். தொடர்ந்தும் பல்வேறு காத்திரமான ஆக்கங்களைத் தாங்கி இச்சஞ்சிகை வெளிவரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

கலாநிதி நா. பத்மநாதன்
பதில் உபவேந்தர்
கிழக்குப் பல்கலைக்கழகம்
05.10.2007

# Message from the Warden, Women's Hostel

I am very happy in sending the message to the "ILAMMPRATHY' which is published by hostel committee of Eastern University, Sri Lanka to mark Silver Jubilee of the year. The contribution of the hostel students is invaluable to release this magazine successfully and it plays an major role in exposing our students' creativeness through articles, poems and other stories.

I take this opportunity to wish them for the successful effort to produce the magazine and also appreciate their effort in this regard.

Mrs. Chandravathany.G.S. Devadason
Warden, Women's Hostel

# ஆண்கள் விடுதிக் காப்பாளரின் வாழ்த்துச் செய்தி

வாழ்க்கைப் பயணத்தில் மறக்கமுடியாத முக்கிய மைல்கல் பல்கழைக்கழகப்பருவம். இப்பயணத்தில் இன்பதுன்பம், ஏற்றமிறக்கம், மனக்கசப்பு, போராட்டம் என பல முக்கிய படிகளைத் தாண்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. இவற்றை சவால்களாக எதிர்வு கொண்டு எதிர்காலத்தில் தனிப்பட்ட, சமூகவாழ்க்கையில் சிறந்த முக்கிய முன்னேற்றகரமான திருப்பு முனைகளை எதிர்வு கொள்வதற்கு இவை உந்துகோல்களாக அமையும்.

பல்கலைக்கழகத்தில் விடுதிவாழ்க்கை என்பது பிரத்தியேக அனுபவங்களையும், ஆற்றல்களையும், சமூக நல்லிணக்கங்களையும் விருத்திசெய்வதற்கு மிக முக்கிய களமாக அமைகின்றது. எமது பல்கலைக்கழக விடுதியைப் பொறுத்தவரையில் மாணவர்கள் பல பிரதேசங்களிலிருந்தும், பல்லின மதங்களைச் சார்ந்தவர்களும் இரண்டறக் கலந்து இருப்பது சமூக நல்லிணக்கத்தைக் கட்டி யெழுப்புவதற்கு சிறந்த வாலிப்பருவத்தையடைந்து வெள்ளி விழாக் கோலம் கொண்ட இக்காலகட்டத்தில் விடுதிக்காப்பாளராக கடமை புரியும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மனமகிழ்வு அடைவதுடன் சகல மாணவர்களும் ஒருதாய் பெற்றெடுத்த பிள்ளைகளைப் போல ஒற்றுமையுடனும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும், சகிப்புத்தன்மையுடனும் வாழ்ந்து எதிர்கால சிறந்த நற்பிரசைகளாக நமது சமூகத்திற்கும், நாட்டிற்கும், ஏன் முழு பிரபஞ்சத்திற்கும் கலங்கரை விளக்காக ஒளிர வேண்டுமென நல்லாசி கூறி எனது செய்தியைச் சமர்ப்பிக்கின்றேன்.

M.M. Mahusan
Warden / Men's Hostel
Senior Lecture
Head / Repf.of Animal Sci. Faculty of Agriculture

# இதழாசிரியரிடம் இருந்து......

கிழக்குப்பல்கலைக்கழக விடுதி மாணவர்களின் படைப்பாக்கத் திறைமைகளை வெளிக்கொணரும் முகமாக வருடம் ஒருமுறை வெளிவரும் சஞ்சிகையாக இளம்பரிதி விளங்குகிறது. எனினும் சில வேளைகளில் ஒழுங்காக வெளிவராமல் போவதும் உண்டு ஒவ்வொரு வருடமும் நிர்வாகக் குழுக்கள் மாறுவதால் அவர்களின் செயற்பாட்டை பொறுத்து இது அமைந்து விடுகிறது. அந்தவகையில் இந்த இதழ் 3வது இதழாக வருகிறது. விடுதி மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவர இளம்பரிதியே ஒரேயொரு களமாக அமைவதால் மாணவர்களால் கொடுக்கப்பட்ட ஆக்கங்கள் அனைத்தும் இதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது அதனால் சில ஆக்கங்கள் தரம் குன்றி இருக்கலாம். வளர்ந்து வரும் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதே இச் சஞ்சிகையின் நோக்கமாகும்.

இன்றைய பதிப்பு செலவினங்களுக்கு மத்தியில் இச் சஞ்சிகையினை நாம் வெளியிட நிதியுதவி அளித்த கிழக்குப் பல்கலைகழக உபவேந்தர் அவர்களுக்கும், நிருவாகத்தினருக்கும் மாணவர்கள் சார்பில் எமது நன்றிகள். மற்றும் இச் சஞ்சிகைக்கான ஆக்கங்களை தந்தவர்களுக்கும், பல வழிகளிலும் சஞ்சிகைக்காக உழைத்த வர்களுக்கும் நன்றிகள்.

இதழாசிரியர்

# காவோலை விழ....

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த வைஷாலி, நிதர்சனமாய் தன்னிலையிலிருந்து மீண்ட போது தன்னெதிரே நின்று கொண்டிருந்த உருவத்தைக் கண்டு திடுக்கிட்டாள். "யார் இவர்?? இவர்.......யார்??......முழுமையாக நரைத்த தலையும், கூன்விழுந்த முதுகும், தீட்சண்யமான அந்தக் கண்களும்.... புறநானூற்றின் 'தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று இருமிடை மிடைந்த சில சொல்....' என்ற பாடலடிகளுக்கு இலக்கணமாக என்முன்னே நிற்கும் இந்த உருவம்....ஓ!!!! ஒருவேளை அப்படியிருக்குமோ??? என எண்ணமிட்டவளின் சிந்தனைக் குதிரைக்கு அவளால் கடிவாளமிட முடியவில்லை.

"வைஷாலி தாத்தா போய்ட்டாரும்மா" என்று தொலைபேசியினூடாக அழுகையுடன் கேட்ட அம்மாவின் குரல் விடுதியில் தங்கிப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த வைஷாலியினைத் திடுக்கிட வைத்தது. ஆனால், "பரீட்சை நேரம் எண்டதால் நீ தாத்தாவின்ர செத்த வீட்டுக்கு வர வேணாம்" என்று அவளின் அம்மா காந்திமதி கூறினாள். வைஷாலியும் அழுதழுது வீங்கிய கண்களுடன் ஒரு வழியாகப் பரீட்சையை முடித்து ஒரு வருடத்தின் பின்பு இறுதிப் பரீட்சையையும் எழுதி விட்டு பாடசாலைக் கல்வியை முடித்து வீடு வந்தபோது அங்கு தாத்தா எனும் அன்பான உறவு இல்லாதது அவளைப் பெருமளவு பாதித்தது.

இவ்வாறு காலங்கள் உருண்டோடி இரண்டு வருடங்கள் கடந்த பின்பு இன்று விறாந்தையில் அமர்ந்திருந்த அவளின் முன்பு உயிரும் சதையுமாய் வந்து நிற்பது யார்? என் தாத்தாவைப் போலல்லவா இருக்கிறார்?? என்ற ஐயம் அவளிடம் தோன்றியவுடன் உடனடியாக விடை காண விழைந்து, அந்தப் பெரியவரிடம், "தாத்தா உங்களுக்குப் புறநானூறு தெரியுமா? அந்த 'யாண்டு உண்டு கொல்லோ' பாட்டை ஒருக்கா சொல்லுங்கவன் கேப்பம்" அவள் கேட்டது தான் தாமதம் கணீர் என்ற குரலில் இருபது வயதுக்கான கம்பீரத்துடன், ஆனால் விரக்தி உணர்வு மேலோங்க, "இனி நினைந்து இரக்கம் ஆகின்று திணிமணல் செய்யுறு பாவைக்கு

கொய்பூத்தை இத்தண்கயம் ஆடும்
மகளிரொடு..............................
.........பெருமூதாளரேம் ஆகிய எமக்கே''

என்று வரி தப்பாமல் சொல்லி முடித்துவிட்டு சிறு குழந்தையைப் போல் கண்கலங்கிக் கொண்டிருந்தவரை ஓடிச் சென்று அன்புடன் தழுவி, "தாத்தா நீங்க செத்திட்டீங்க என்று அம்மா சொன்னவ என்னெண்டு இப்ப...??. என்று கேட்டவளுக்குப் பதில் சொல்ல தாத்தா வாய் திறந்த நேரம் விறாந்தையின் அரவம் கேட்டு வாசற்படிக்கு வந்த காந்திமதி ஸ்தம்பித்து நின்றாள். 'இப்ப..ஐயா இங்க ஏன் வந்தவர்....?' என்று தனக்குள்ளே முணுமுணுத்தவாறு, மகளிடம் "ஆரோட கதைக்கிறாய்?'' என்று சர்வ சாதாரணமாகக் கேட்டாள் காந்திமதி. உடனே "எங்க தாத்தா தானம்மா நீங்க அவர் செத்திட்டாரெண்டு சொன்னியள்?'' என்று மகள் முடிக்கும் முன்பே காந்திமதி அவளை உள்ளே இழுத்து வந்து கதவை அறைந்து சாத்திவிட்டு சாதாரணமாகத் தன்வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டாள்.

அம்மாவின் செயலால் சந்தேகம் கொண்ட வைஷாலி மீண்டும் கதவைத் திறந்து படலைக்கப்பால் சென்று கொண்டிருந்த வயோதிபரை நோக்கி ஓடிச்சென்று மூச்சு வாங்க, "தாத்தா ஏன் தாத்தா நீங்க சாகல்லயா? நீங்க செத்திட்டீங்க என்று அம்மா பொய்யா சொன்னவ?'' என்று கேட்க, அழுகையினூடே தன் கதையை சுருக்கமாகக் கூறினார் அவளது தாத்தாவான சிதம்பரப்பிள்ளை.

தன்னை விரட்ட நெடுநாளாக காந்திமதியும் இராஜேஸ்வரனும் போட்ட திட்டத்தையும், தாத்தா மேல் உண்மையான பாசம் வைத்திருந்த வைஷாலி இதற்குத் தடையாக இருப்பதால் அவள் விடுதியில் தங்கியிருந்து பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த போது தன்னைக் கூட்டிச் சென்று முதியோர் இல்லத்தில் சேர்த்ததையும், வைஷாலிக்கு தாத்தா செத்துப் போய்ட்டார் என்று காந்திமதி சொன்ன பொய்யையும், இப்போது வைஷாலியைப் பார்ப்பதற்காகவே தான் இவ்வளவு தூரம் வந்ததையும் தட்டுத்தடுமாறி விம்மலுடன் சொல்லி முடித்தார் தாத்தா.

ஓ....... என்று கதறிய வைஷாலி தாத்தாவைக் கையில் பிடித்து அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் வந்தாள். உள்ளே நுழைந்தவள் பெண்ணொன்று பேயானதோ!!! என வியக்கும் வண்ணம் தனது கோபக் கணைகளைத் தன் அன்னையை நோக்கி எய்யத் தொடங்கினாள். "அம்மா! தாத்தாவுக்கு ஏனம்மா இப்பிடிச் செய்தனீங்கள்? அவர் உஷாரா இருக்கேக்க அவர்ர உதவி உங்களுக்குத் தேவைப்பட்டிச்சு. ஆனா இப்ப அவருக்கு வயசாகி ஏலாமப் போன உடனே தூக்கி எறிஞ்சிட்டியள் என? கேவலம் தன்ர சொந்த அப்பாவையே முதியோர் இல்லத்தில கொண்டுபோய் விட்ட பெருமைக்குரிய மகள் நீங்களாத் தான் இருப்பீங்க! அம்மா ஒரு விஷயத்த மறந்திட்டீங்களா? நீங்களும் கிழவியானாப் பிறகு உங்கள நான் முதியோர் இல்லத்தில கொண்டுபோய் விட்டா உங்கட கெதி என்னாகும்? அத கொஞ்சமாவது யோசிச்சுப் பாத்தீங்களா? ஒரு தகப்பன் உயிரோட இருக்கும் போதே அவர் செத்திட்டார் எண்டு சொல்ல உங்களுக்கு எப்பிடி மனசு வந்தது? இப்பிடி ஒரு அம்மா கிடச்சதுக்கு நான் வெக்கப்படுறன். வயசில குறஞ்ச எனக்கு இருக்கிற மனிதாபிமானம் கூட உங்களுக்கு ஏன் இல்லாமப் போச்சு? ஆனா ஒண்ட மட்டும் மறந்திடாதீங்க! "நாளைக்கு நீங்களும் காவோலை தான்!!!" என்று படபடவெனப் பொரிந்து விட்டு விறுவிறு எனநடந்து அறையின் உள்ளே சென்று கதவைச் சாத்திக் கொண்டு குமுறிக்குமுறி அழுதாள் வைஷாலி. மகளின் சரமாரியான வார்த்தைகளைக் கேட்ட காந்திமதிக்கு வைஷாலி இறுதியாகச் சொன்ன "நீங்களும் நாளைக்குக் காவோல தான்" என்ற வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளது காதில் எதிரொலிக்க தான் செய்த பிழை நெருஞ்சி முள்ளாய் நெஞ்சை உறுத்த பாவமன்னிப்பு நாடி... அப்படியே மண்டியிட்டு தனது அப்பாவின் காலில் விழுந்தாள்.

முற்றும்

அ.ஸயிந்தவி
இறுதிவருடம்
புவியியல் சிறப்பு

# புணர்தலின் கடைசி விதி

உயிர் செய்யும்
தொழிற்சாலை செய்
புணரு
இனிப் புணர்தல் மட்டுமே
உன் தொழிலாகக் கொள்
வெட்கம் பாராதே
நிண்ட இடத்தில்....
கண்ட இடத்தில்...
விரும்பியோ விரும்பாமலோ
கலவி கொள்......

பன்றிகளா நாம்
ஒரு தரம் பிணைந்து
பதினாறு குட்டி போட
ஆமைகளா நாம்
ஆயிரம் முட்டைகளிட்டு
அரைவாசி பொரித்தாலும்
முதலுக்கு நட்டமில்லை...

நாம் ஓயாமல் புணர்ந்தாலும்
பிள்ளை பெற
பத்துமாதம் காத்திருக்கும்
மந்தப் பிறவிகள்

வேருத்துப் பிசி பிசித்து
கலவியில் களைத்துப்
போனாலும்
எரிச்சல் எடுத்தாலும்
உனக்காக அல்ல.... நமக்காக
சளைக்காமல் கலவி கொள்
பிள்ளை பெருகட்டும்... பெற்றுத்
தள்ளு

மூத்த பிள்ளைக்கு
முப்பது வயதானால் என்ன
உன் கடைசிப் பிள்ளை
கர்ப்பத்தில் இருக்க வேண்டும்
கருமுட்டை காலியாகும் வரை
விந்துக்குளம் வற்றிப் போகும்
வரை
இதுவே உன் வேலையாகட்டும்.

நமக்கு மட்டுமல்ல
எல்லோருக்கும்
உயிர் தேவையென்றான பிறகு
பிள்ளை மூக்கோடித்
திரிந்தாலும்
பிழைத்துக் கொள்ளும்
அதனால் பெற்றுத் தள்ளு....

பிள்ளைகள்
பரிசோதனைக் குழாயில்
பிறந்தால் என்ன
பலோப்பியன் குழாயில்
பிறந்தாலென்ன
சிந்திக்காதே..
நாளை பீரங்கிக் குழலிலும்
பிள்ளை பிறக்கும்
அலட்டிக் கொள்ளாதே....

நமக்கு மட்டுமல்ல
எல்லோருக்கும்
உயிர் தேவையென்றான பின்
சிந்திப்பதில் பயனில்லை...
பெறு... பெற்றுத்தள்ளு

காய்க்காமல் பூக்காமல்

உன் பரம்பரையில் நாளுக்கு
பத்து பதினைந்து
பாடையிலே போகும் காலமிது
ஒரு பிள்ளை போதும் என்று
நீ புணராமல்
சோம்பியிருந்தால்...

நாளை
எறும்பும் கருக்கட்டி பிள்ளை
பெறும்
காகத்தின் கூட்டில்
குயில் குஞ்சு பொரிக்காது
முட்டைக்குள் இருந்து சாவோடு
கைவீசி வருவான்

நம்பிள்ளை
உயிர்....உயிர்
நமக்குமட்டுமல்ல
எல்லோருக்கும்
தேவையென்றான பிறகு
புணர்தலை மட்டும்
நிறுத்தாதே....

ஒவ்வொரு நாளும் சுட்டுப்பழக
பிள்ளை பெற்றுக்
கொடுக்காட்டி...
நாளை
நீ.....நீ...
இருக்கமாட்டாய்.......

ப. சுஜந்தன்
கலைப் பீடம்.

# நானும் நீயும்

என்னை ஏன்
நீயாக மாற்ற முயல்கிறாய்
எனக்கென்று சில உணர்வுகள்
எனக்கென்று சில இருத்தல்கள்
தயவு செய்து
நான் நானாகவே இருந்து
விட்டுப் போகிறேன்
நீ நீயாகவும்
நான் நானாகவும்
இருந்ததினால்
காதல் மலர்ந்தது
இப்போது மட்டுமேன்
என்னை நானாக
இருக்க விடமாட்டேன்
என்கிறாய்

என்னை நீயாக மாற்ற
முயல்கிறாய்

நானும் நீயும் நீயானால்
காதல் சிறுத்து விடும்
அதனால்
காதலுக்கு முன் போல
நான் நானாகவும்
நீ நீயாகவும்
அது அதுவாகவும்
இருக்கட்டும்
காதல் காதலாக இருக்கும்.

இ. பிரதாபன்
இறுதி வருடம்.

## பெண் பிள்ளை

உலகிற்கு காட்சி கொடுக்க
தாய் என்ற பெண்
வேண்டும்
உன்னுடன் கூடி விளையாட
தங்கை என்ற பெண்
வேண்டும்
இளவயதில் கதைத்து மகிழ
தோழி என்ற பெண்
வேண்டும்
அன்பைக் கலந்து உறவாட
காதலி என்ற பெண்
வேண்டும்.
ஆவலுடன் வாழ்க்கையை ஆரம்பிக்க
மனைவி என்ற பெண்
வேண்டும்.
ஆனால் உன் உயிரால் பிறந்த
மகள் என்ற பெண் மட்டும்
வேண்டாம் என்கிறாயே?

## வரம்

கடவுளிடம் ஒருவரம் கேட்கிறேன் – என்னை
மிருகமாகப் பிறக்கச் செய் ஏனெனில்
கடைசி மனிதனையாவது
பார்ப்பதற்கு நான் இருப்பேன் என்பதால்

## இரண்டாவது சந்தேகம்

கடவுளைப் போன்றவர்கள் தான்
இலங்கையில் காணமல் போனோர்.
ஏனெனில்
இல்லாரா உள்ளாரா என்று
இதுவரை புரியவில்லை.

எல். மயூரன்
1ம் வருடம்
கலை கலாச்சார பீடம்

இராம்பரிதி

# வாசித்து வாழ்வு கொடு

உன் கருவிழியில் மையெடுத்து
உருவம் வரைவேன் வானத்தில்
கூந்தலில் நூலெடுத்து
கூடு கட்டுவேன் மேகத்தில்
வார்த்தைகளை
கோர்த்தெடுத்து
வடித்திடுவேன் கவிதை பல
பாதச் சுவடுகளை படம்பிடித்து
படங்களாக மாட்டிடுவேன்

இதயத்தில்
நகங்களை தேடியெடுத்து
நட்டிடுவேன் மரமாக
நீ செல்லும் பாதைகளில்
விழி புதைத்து
நித்தம் ஒரு கதை பேசி
நிழலோடு நிழலாவேன்
உன் காதல்
கிடைக்குமென்றால்....!

பார்வைகளில் நீ சொல்லும்
பாடங்கள்
புரியாமல் த்விக்கின்றேன்
தடுமாறி நிலைமாறி
தனிமையில் துடிக்கின்றேன்
காதல் வாசகம் கேட்கின்றேன்
என்னையும் காதலையும்
அங்கீகரிக்கும் உன்
புன்னகைதான்
புதைமேடுகளில் கூட பூப்பூக்க
வைக்கும்.
காதல் அவஸ்தை தான் என்பது
உன்னைக் கண்ட பின்புதான்
உணரப்படுகிறது......

ஒரு நாள் காணாவிடின்
துடிக்கின்ற துடிப்பில்
தென்றல் கூட புயலாய்தான்
மூச்சுக்காற்றாய் வெளிவரும்!
என் உணர்வுகளை புரிந்து
கொள்ள முடியாத ஒருத்தியாக
உன்னை நினைக்கவில்லை

இந்தக் கவிதைகளில் நிஜங்கள்
மறைக்கப்பட்டிருப்பது புரியும்
விரைவில் விடை தருவாயா!
உன்னை பிடித்திருக்கிறது
காரணம் சொல்லத்
தெரியவில்லை!

கவிதைகள் பூக்கின்றன
கனவுகள் ஊர்வலம் வருகிறது
நித்திரை மறந்து போகிறது
உன் பெயர் உச்சரிக்கையில்
எனக்குள் ஒரு மின்வெட்டு
திகழ்கிறது
இதற்கெல்லாம் காரணம்
கண்டுபிடிக்க
என்னால் முடியவில்லை.....!

நிலவு கூட தினமும் தேய்கிறது
தன் காதலியின் நினைவுகளால்
மறுபடியும் வளர்கிறது – அவள்
கிடைப்பாள் என்ற
நம்பிக்கையில்....!

காதலுக்கு இலக்கணம்
இல்லை
காதலர்களுக்குத்தான் உண்டு
காதலுக்கு அழிவில்லை
காதலர்க்குத் தான் பிரிவுண்டு
உண்மையான அன்போடு
என்னைப் புரிந்து கொள்
எம் காதலும் இறவாமல்
என்றென்றும் வாழும்!

மண்ணில் விழும்
மழைத்துளிகளாய்
உன்னில் விழும் என் நினைவுத்
துளிகள்
உன்னோடு கலந்து விட
உத்தரவு தா அப்போது
இந்தக் காதலும்
கவி பாடும் கனவுகள் நிஜமாகும்.

ஆனந்தி
கலை கலாசார பீடம்

## தமிழனின் நிலை

நீ புலம்பெயர்ந்த தமிழனா?
இடம் பெயர்ந்த தமிழனா?
புலம்பெயர் தமிழன் எனில்!
தொலைக்காட்சியில் பிணம்
காண்பாய்
இடம்பெயர் தமிழன் எனில்!
பிணத்துடன் இரண்டறக்
கலப்பாய்.
ஏனோ! இதுதான் எம் நிலை
இலங்கைத் தமிழனின் நிலை.

எஸ். லுஜந்தன்
1ம் வருடம்
வர்த்தக முகாமைத்துவ பீடம்



கோனேஸ்

# அநாதையான அகதிகள்

விண்உடைந்து வருவாயா?
ஆண்டவா
விம்மி அழும் மனித குல
துயர்களைப் போக்கிட

மனிதம் மரித்த மண்ணில்
அகதிகள் பிரசவங்கள் ஏராளம்
கண்ணீர் துடைக்க வருவாயோ?
இல்லை நீயும்
இங்கு பொய் தானோ?

கண்ணை இழந்தான் கணவன்
காலை இழந்தான் காளை
பிள்ளை இழந்தார் பெற்றோர்
சேற்றில் கிடந்தான் தந்தை
சேலையற்ற அன்னையின்
செத்த மார்பில் பால் தேடி
ஏமாந்தழும் மழலை
தலை இழந்தான் தமையன்
சீரழிந்தாள் தங்கை
துயர் தாங்காமல்
விஷம் அருந்தி
மரித்தவர் எத்தனை பேரோ!
செத்தது போக சிறையில்
மறைந்த என் உறவுகள்
எத்தனையோ!
இவை கண்டு ஆண்டவா
ஓடி ஒழிந்து விட்டாயோ?

சுடு மண்ணும்
கனல் வெயிலும்
உறைபனியும்
பசித்துருகும் வயிறும்
ஓய்ந்து போன கையும்
ஓடி அடங்கிப் போன
கால்களும்
கவலையோடு காதலும்
கண்ணீரோடு நட்பும்
இதுதான் இங்கே
என் உறவுகளான
அகதிகள் நிலை
உருகுதையா ஆண்டவா!

நீ என்ன வெறும் கல்தானோ?
உயிர் இழந்தது போக
மண்ணை இழந்து
பொன்னை இழந்து
வீடு இழந்து
வேண்டிய சொத்திழந்து
விதைத்த வயல் இழந்து
விளைந்த கதிர் இழந்து
ஆடு இழந்து மாடு இழந்து
மானம் இழந்து மனதிலே
அமைதி இழந்து
உயிர் இருந்தும்
உணர்விருந்தும்
நடைப்பிணங்களாய் மிச்சப்போர்
தகரக் கொட்டிலில் இங்கே
அகதி முகாம்களில்
ஆண்டவாஅல்லல் உறும்
என் குலம் வாழ
அருள்தந்திடு-இல்லையேல்
என்னையும் சேர்த்து
என் குலம்தனை மொத்தமாய்
அழித்திடு!

**P**.கமல்ராஜ்
3ம் வருடம்,
சமூகவியல் சிறப்புக்கற்கை

*இளம்பரிதி*

# இதுதான் வாழ்வென்றால்

கடந்து போன
அந்த நாட்களும்
நிஜமாகி
கழிந்து கொண்டிருக்கும்
இந்த நாட்களும்......
வெற்றுக் காகிதங்களாய்....
ச
று
க்
கி
ய
எம் வாழ்க்கைக்கு
சாட்சிகளாயின।
ஏன் என்ற வாதமின்றி
எதற்கு என்ற கேள்வியின்றி
மாயையால் கட்டுண்டது போல்
மரணித்துப் போயினவோ
எங்கள் உணர்வுகள்
எத்தனையோ கபட நாடகங்கள்
தினமும் அரங்கேறும் – எங்கள்
கண்கள் முன்
ஆனாலும் தட்டிக் கேட்க
துணிவிருந்தும்
தலை குனிந்தே
வாழ்ந்து விட்டோம்।
இதுதான்
யதார்த்த வாழ்வென்றால்
இதுதான்
வாழ்க்கை தருமமென்றால்
இப்படியொரு மானிட வாழ்க்கை
தேவைதானா எமக்கு?
ஏன்....?

கண்களிருந்தும்
குருடர்களாய்.....
காதுகளிருந்தும்
செவிடர்களாய்....
வாயிருந்தும் ஊமைகளாய்....
மௌனித்து
மரணித்துப் போனோம்?
மனிதனுக்குத் தனித்தன்மை
விலங்கிலிருந்து
இவைதானே। – ஏன்
தட்டிக்கேட்க
மறந்துவிட்டோம்?
காட்டுமிராண்டி வாழ்க்கைக்கு
மீண்டுகொண்டிருக்கிறோமா?
இல்லை
மனதிலிருந்த மனிதம்
மரணித்து விட்டதா?
இந்த வாழ்க்கைக்கு ஏன்....?
நாகரீகமும்...
மானுட வாதங்களும்...?
வெளுத்துப் போன
மனிதத்துக்கு
நாகரிக முலாம் பூசி என்னதான்
சாதிக்கப் போகிறோம்?
இதுதான் வாழ்க்கை என்றால்
எமக்கேன் சட்டங்களும்
தேவையற்ற பட்டங்களும்।
எங்கள்
இருப்பை நிலை நாட்டலே
இந்த
நீ......ண்......ட வாழ்வின்
இலக்கென்றால்,

*இளம்பரிதி*

வேண்டாமே எம் கையில்
நூல்களும் பேனாவும்
அவரவர்
ஏ.கே யும் எல்.எம்.ஜி யும் தூக்கி
இருப்பை நிலை நாட்டட்டும்!
இதுவே வாழ்க்கை என்றால்
ஏன்......?
பண்பாடு, கலாசாரம்?
மனிதம்
வீழ்த்துக் கொள்ளட்டும்.
இல்லையெனில் இந்த
துடிப்பான இளசுகளின்
பேனா முனைகள் மூடிக்குள்
முகமூடி இட்டுக் கொள்ளட்டும்.
நேற்று,
செம்மணி,
துரையப்பா விளையாட்டுத்திடல்
கிரிசாந்தி....
கோணேஸ்வரி....ரீட்டா....
இன்று,
வங்காலை,
திருமலை, அல்லைப்பிட்டி
நெல்லியடி, பேசாலை,
கெப்பிட்டிக் கொல்லாவ....
நிமலராஜன், சிவராம்,
பரராஜசிங்கம்
விக்னேஸ்வரன்..
இன்றும்... இன்னும்.....
நாளை,
நான், என்தந்தை,
தாய், சகோதரர்கள்
நீ, உன் தாய், தந்தை.......
இன்னும்...... இன்னும்.....
எதற்காக
இந்த குருதிப் பயணம்?
வாழ்தலுக்காய்
போராட்டமென்றால்
அலை ஓய் ல்லை
கள் வதி
என்பதுபோல்
ஏன் இந்த
வன்முறை கலாசாரம்?
எமக்குத் தேவையானது
இப்பொழுதெல்லாம்
சுதந்திரமாய்
சுவாசிக்க ஒரு வானம் தான்!
யுத்தத்தை எதிர் நோக்க
தோள்களுக்கு வலிமையில்லை
எம்
மனதுக்கும் கனதியில்லை!
இன்னுமொரு
புத்தன்
ஜேசு
மகாத்மா
இவர்கள் தான் இனி வேண்டும்.
இன்னுமொரு
கி மு
ட் சோ
ல லி
ர் னி
எமக்குத் தேவையில்லை!
இப்பொழுது பேனா தூக்கி
அகிம்சை பாதையமைக்கும்
புனித தொழிலாளிகள் தான்
வேண்டும்
எங்களில் யார்? அந்தப்
புனித பாதையை
அமைக்கப் போகிறோம்?

எங்கள்
நி
மி
ர்
வு மற்றவனின்
வீ
ழ்
ச்
சி யில் தான் என்றால்
வேண்டாம் அப்படியொரு
நிமிர்வு!
நாங்கள் கனவுகளை காசுக்கு
வாங்குபவர்களாகவே இருந்து
வீட்டுப் போவோம்.
ஆனால்,
மற்றவன் தூக்கத்தை பறிக்கும்
கயவர்களாக வேண்டாம்.

கடந்து போன அந்த நாட்கள்
கலங்கமாய் போனால்
போகட்டும்.
நிஜமாகி கழிந்து
கொண்டிருக்கும்
இந்த நாட்களும்
வெற்றுக் காகிதமாய்
போகட்டும்
மலர இருக்கும் நாளையாவது
ஒரு எதிர்காலத்தைக்
காட்டட்டும்!

ச. கோபிரமணன்
3ம் வருடம்
கலைப் பீடம்.






# ஆக்கிரமிப்பு

'கொக்கரக்கோ....!'
கூரையேறிக்
கூவல் போடும் சேவல்.
பழஞ்சோறுக்காய்
படலை தட்டும் பசுமாடு.
தரை விழுந்து
தலை பிளக்கும் பனம்பழம்.
காலை நேரக்
கள்ளதன் கைங்கரியமாய்,
தடுமாறித் தவழும்
எம் 'தள்ளாடித் தாத்தா!'

பள்ளம் திட்டிகளாய் – சில்லுகள்
பதம் பாரக்கும் பாதைகள்.
மூன்று மாதம் முழுகாதவளாய்,
எம் ஊர்ப் பேருந்து.
வீதிப் புழுதி படைத்திட்ட
வீரவரலாறுகள்!

சாணி மெழுகிச் சாந்திட்ட,
வீரைக் கொள்ளியின்
விறகடுப்பில்,
கள்ளக் கோழியும்;
பக்கத்துப் படலைப்
பாகற் காயும்ாய்....
வளர்த்தவனவன் சாபமும் சேர,
விக்கித் தண்ணீர் தேடும்
அத் தொண்டைக் குழி!
ஓலைக் கூரைகளும்;
பனையோலைப் படலைகளும்,
குலையிட்ட வாழைகளும்;
கோதித்
தொங்கும் கொய்யாக்களும்,
கொலைகாரக்
கொடும் வெயிலுக்காய்
வேலியோர வெள்ளரியும்!
நிலவொளித் தூக்கங்கள்,
நிம்மதியான ஏக்கங்கள்
அப்பாவி மனிதர்களும்,
அருமையான சொந்தங்களுமாய்,
அன்றோ,
வசந்த காலமாய் வாழ்வின்
அர்த்தங்கள் பல.
என் சொந்த மண்ணும் சொர்க்க
வாழ்வும்!
பட்டது எவன் கண்ணோ?
இன்றோ,
துட்டகைமுனுக்களின்
துவம்சிப்பில்
தொலைக்கப்பட்டதாய் என்
ஊர்.....

புத்தரிசிச் சோறு,
புளியமரத்தடித் தூக்கம்,
வாய்க்கால் குளியல்,
வரப்பில் சைக்கிளோட்டம்,
விளக்கொளிப் படிப்பு,
விடலைத் தோழர்கள்,
திருட்டு மாங்காய்,
திருவிழாக் கோயில்,
உறைப்பு மிளகாயும்,
உடும்பின் கறியும்,
இவைகள்
நாளை என் பிள்ளைகளுக்காய்
இல்லாமல் போனவை!

சி.ஆரணியன்
(முதலாம் வருடம்)
வர்த்தக முகாமைத்துவ பீடம்

## வாசிக்கப்படாத சுவர்வாசகங்கள்

*இளம்பரிதி*

கவிதைகள் என்ற உடனேயே மனிதனது மனதுள் ஒரு இன்பமான மின்சாரப் பாய்ச்சல் நிகழும். கவிதைகளைப் பிடிக்காதோர் அபூர்வமாக ஓரிருவரே காணப்படக் கூடும். மனிதன் தன் உள்ளத்து உணர்வுகளை ஏதோ ஒரு வடிவத்தில், நேரத்தில் வெளிக்காட்டுகிறான். அவை தகுந்த சாதனங்களின் மீது ஏறி முறையாக எம்மை ஒரு அமைப்பில் வந்தடையும் போது தான் நாம் அவற்றுக்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுக்கிறோம். அவ் அமைப்புக்களில் கவிதைகளை உள்ளவாறே படம் பிடித்துக் காட்டுவது கவிதையாகும்.

கவிதைகள் என்றவுடன் பத்திரிகைகளில் வருவனவற்றையோ வானொலிகளில் ஒலிபரப்பாவனவற்றையோ தனியான தொகுப்புக்களையோ மட்டுமே நாம் கருதிவிடுவதுண்டு. ஆனால் அவற்றைவிட எம் கண்களில் முன் காணப்படும் பல்வேறு இடங்களிலும் யாருக்கும் சொல்ல முடியாத, சொல்லியும் தணிக்க முடியாத சோகங்களை, இன்பங்களை, நகைச்சுவைகளை வீதிச் சுவர்களிலோ, விடுதிச் சுவர்களிலோ, மலசலகூட சுவர்களிலோ, தியேட்டர் சுவர்களிலோ, பல்கலைக்கழக விரிவுரை மண்டப கதிரை, மேசைகளிலோ எழுதித் தமது எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர். இது எழுதுபவரது உளவியலோடு, மனநிலையையோடு சம்பந்தப்பட்டதாகக் கருதினாலும் கூட அவை வாசிக்கப்படும் போது தனித்துவமானவையாகக் காணப்படுகின்றன. அச் சுவர்கள் சுமந்து நிற்கும் கவிதைகளும் அவை எழுதப்படும் சூழலும் இதற்கான காரணங்களும்சுவை பயப்பனவாகும்.

உதாரணமாக விரிவுரை மண்டபத்தில் ஒரு தினம் இரண்டு வரிகளில் எழுதிவிட்டுச் செல்லும் கவிதைக்கு மறு தினம் பதில் கவிதை எழுதப்பட்டிருக்கும். இவற்றை எழுதிக் கொள்பவர்கள் தங்களை இணங்காட்டத் துணிவதில்லை. இது போன்ற சம்பவங்கள் இன்னும் நீள்கின்றன.

சுவர்கள் சுமந்து நிற்கும் கவிதைகள் பெரும்பாலும் யாரால் எழுதப்பட்டன என்று அறிய முடியாதவை. இவற்றில் பல படித்துச் சுவைத்தவற்றை தமது கற்பனைக்கு ஏற்ப மாற்றியும் சுயமாகத் தம்மால் படைத்தனவாகவும் அமைகின்றன. அத்தகைய விடுதிச் சுவர்கள் சுமந்து நிற்கும் சுவையான கவிதைகளை பார்ப்போம்.

*இராம்பரிதி*

நீ கேட்டு வந்ததா பிரிவு-
இல்லை
நான் கேட்டு வந்ததா பிரிவு
இது நம் காதல் செடியில்
ஏற்பட்ட ஒரு முறிவு

♣ ♣♣

வார்த்தைகளால் வசந்தம்
கொடுப்பாய்
என நினைத்தேன் நீ
மௌனத்தால்
மரணத்தையல்லவா கொடுத்து
விட்டாய்!

♣ ♣♣

எழுது எழுது
கடிதம் எழுது
நீ என்னைக் காதலிக்கிறாய்
என்றல்ல
வேறு ஒருவரையும்
காதலிக்கவில்லை என்று....

♣ ♣♣

அரசாங்க எச்சரிக்கை,
புகைத்தல் புத்தியை
தெளியவைக்கும்
மது உன்னை மன்மதனாக்கும்.

♣ ♣♣

வசந்தம் எங்கள்
வாசலில் அதனால்
வாழ்க்கை பற்றி
கவலையில்லை

♣ ♣♣

உனக்காக என் உயிரையும்
தருவேன்
உனக்குள்ளும் என் உயிரைத்
தருவேன்.

♣ ♣♣

காதலிக்கிறாய் எனில்
தயாராயிரு
கண்ணீர் வடிக்க!

♣ ♣♣

உன் கனவுகளை என்
நினைவுகள் என்றும்
காவியமாக்கும்!

♣ ♣♣

இளமை ஒரு குடலை
வாழ்க்கை என்னை விடலை
நான் உன்னைத் தொடலை
உன் டடி என்னை விடலை!

♣ ♣♣

கம்பராமாயணத்தில் வாலி வதை
பெண்ணே என் வாழ்வில்-நீ
வாலிப வதை!

♣ ♣♣

கடலில் மூழ்கியவன்
முத்தெடுப்பான்
காதலில் மூழ்கியவன்
பிச்சையெடுப்பான்!

♣ ♣♣

படித்தவனுக்கு செல்லும்
இடமெல்லாம் சிறப்பு
குடிப்பவனுக்கு செல்லும்
இடமெல்லாம் மப்பு!

♣ ♣♣

பெண்ணுக்கு காதல் ஒரு
வரலாறு
ஆணுக்கு அது ஒரு
அத்தியாயம்!

♣ ♣♣

அணுஅணுவாய் சாவதென்ற
பின்
காதல் என்பது
சரியான முடிவுதான்!
கண்ணியமான முத்தம் -
அன்பளிப்பு
காட்டுத்தனமான முத்தம் -
கற்பழிப்பு
♣ ♣♣
முன்னுக்கு நெருப்பு
பின்னுக்கு முட்டாளின் வாய்
சிகரட்
♣ ♣♣
உன்னைக் கணக்குப் பண்ணி
அலைந்ததனால்
தோற்றுப் போனேன்
கணக்குப் பாட பரீட்சையில்!
♣ ♣♣
அத்தான் என்று சொல்லும்
போது
பொத்தடி வாயையென்று
சொல்ல மனம் வரும்
.......................
உன் செத்த
முகத்தைப்பார்க்கும் போது...
♣ ♣♣
கிழக்குப் பல்கலைக் கழகமாய்
நீ
வெளியேற முடியாமல் நான்!
♣ ♣♣
மார்கழியை எதிர் பார்த்தேன்
மழைநீர் வந்தது!
காதலியை எதிர்பார்த்தேன்
கண்ணீர் வந்தது!
♣ ♣♣
வீசுகின்ற காற்றுக்குக் கூட
உன்னைத் தெரிகிறது
அதனால் தான்
என்மேல் வேகமாகவும்
உன்மேல் அமைதியாகவும்
தாக்குதல் செய்கிறது!
♣ ♣♣
தூக்கத்திலும் கூட
நோக்கமற்றுப் போனால்
வாழ்க்கை
ஏக்கத்திலும் கூட
ஊக்கமற்றுப் போகும்!
♣ ♣♣
நீ நீயாக இரு
நான் நானாக மாறிவிடுவேன்.
♣ ♣♣
வானவில்லும்
வண்ண மங்கையின்
காதலும் ஒன்றே.
♣ ♣♣
உன்னைப் பார்த்தேன்
என்னை மறந்தேன்-பின்னால்
உன் தங்கையைப் பார்த்தேன்
உன்னை மறந்தேன் உன்
வேலைக்காரியை கண்டேன்
இருவரையும் மறந்தேன்.
♣ ♣♣

தொகுப்பு:
காரையூரான்
நிலாவெளியான்
இடைக்காடன்

# அன்புள்ள அம்மாவுக்கு....

நிறைவான நிலவே....
நடை போடும் தெய்வமே..
தளராத அன்பே....
பலமான பாசமே..
இன்று எண்ணித் தவிக்கிறோமே
உன்னை...

பத்துத் திங்கள் எம்மை
சுமந்தாய்
பிறந்த பின்பும் எமக்காய்
வாழ்ந்தாய்
கனிவான செல்வமே — இன்று
தெளிவான உண்மை கண்டோம்
பெண்மை என்னும் மேன்மை
தாய்மை
என்ற பின்புதான்
உண்மையானதென்பதை
இன்று உணர்ந்தோம்...
அந்த தாய்மை தந்த பாசம்
தேடி இன்று
அலைகிறோம்....

நாம் படித்த காலத்தில்
எத்தனை இரவுகள்
நீதான் கண் விழித்தாய்
அம்மா....!
பட்டப் படிப்பிற்கு நாம் தான்
தெரிவானலும்
நீ பட்ட பாட்டுக்கெல்லாம்
யாரம்மா
உனக்குத் தருவார் பட்டம்!
பத்தியமாய்ப் பார்த்தெமக்கு நீ
சமைத்துத் தந்தாலும்
பகுத்தறிவு இன்றி அதை எட்டி
உதைத்தோம்...
இன்று அதை
நினைத்துப்பார்த்தால் எம்
நெஞ்சு கூசுதம்மா..
நோய் கொண்டு நாம் படுத்தால்
எம் தலை முடியை வருடிய
உன் கைகளை எம் கண்கள்
தேடுதம்மா...
கட்டவிழ்ந்த காளையாய் நாம்
பட்டுத் திரிகையில்
நீ இட்ட செல்லக்
கட்டளைகளை இனி எங்கு
கேட்பதம்மா...
இந்த மெழுகுவர்த்தியுடன்
சேர்ந்து உருகிய வண்ணம்
எழுதுகின்றோம்.....
இந்த நான்கு வருடமும் இந்த
மெழுகுவர்த்தி போன்று
விரைவாய் உருகி ஓட வேண்டும்
உன்னோடு நாம் விரைவில்
சேர்ந்து வாழவேண்டும்.....

க. திரியம்பவன்
1ம் வருடம்
கலை கலாசார பீடம்

## உதிர்ந்த காதல்

கைகளில் ரோஜாவோடு
கண்களில் கண்ணீரோடு
கால்கள் வலம் வந்தன
கல்லறை சுற்றி

என் கன்னங்கள்
மரத்து விடலாம்
உன் கண்ணீர் பட்டு
வேண்டாம்
அவை அழகில்லாமல்
இருக்கட்டும்
உனக்கும் சேர்த்து – நானே
அழுது கொள்கிறேன்
உதிர்ந்த காதலுக்காய்
என் கண்ணீரை
துடைத்து விடாமல்
என்னிடம்
நீ பறித்த
இதயத்தை மட்டும்
தந்துவிட்டுப் போ

நீ என்னை அணைப்பாய்
என்றுதான்
நான் காத்துக்கிடந்தேன்
உன் நிழல் போல
ஆனால் நீ
என் காதலை உதிர
வைத்துவிட்டாய்.

போகவா என்று நீ
அடிக்கடி கேட்டது எல்லாம்
இந்த உதிர்ந்த
காதலுக்குத்தானா?
முதலிலே தெரிந்திருந்தால்
உன்னை நான்
நெருங்கியிருக்க மாட்டேன்.
கண் கொள்ளாக் காட்சிதனில்
காதலுக்காய் காலமெல்லாம்
காத்திருந்தேன்
நெஞ்சில் உனை நிறைத்து.

கனவுகள் அதிகரித்து
காலங்கள் கடந்து போன
வாழ்வு
இனியும் எனக்கு வேண்டாம்.

சிலேந்திரன்
கலை கலாசார பீடம்
1ம் வருடம்.

## என் காதலியே

என் இனியவளே! என்ன
பார்க்கின்றாய்
என் இதயமடி நீ!
தேவதையே! என்ன
கேட்கின்றாய்
என் தேவாமிர்தமடி நீ!
என் சிலையே! என்ன
சிந்திக்கின்றாய்
என் சிந்தனைத் துளிகளடி நீ.
என்னவளே! என்ன
யோசிக்கின்றாய்
என்னை பிடித்த சனியனடி நீ.

எஸ். லுஜந்தன்
1ம் வருடம்
வர்த்தக முகாமைத்துவ பீடம்

*இளம்பிறை*

## ஏன்?

எண்ணி வாழ்ந்த வாழ்க்கை
இன்று
ஏதுமின்றிப் போய்விட்டதே
அன்பிற்காய் ஏங்கி
அனாதையாகி விட்டன.

உறவுகள் தொடரலாம்
உரிமைகளும் தொடரலாம்
ஆனால்
என் உள்ளத்தில்
எரிந்து கொண்டிருக்கும்
என்
கனவுகள் தொடருமா?

அண்டமெல்லாம் காத்தருளி
அமைதி தந்தருளும்
எந்தையே ஈஸ்வரா
இன்னும்
எத்தனை காலம் - நான்
வேதனைத் தீயில் உழந்து
வருந்த வேண்டும்?

பேற்றோரும் மதிக்கவில்லை
உற்றோரும் விரும்பவில்லை
உன்பாதம் சேர
நீயும் அழைக்கவில்லை
ஏன்?

என்னைப்படைத்தது – உன்
பொழுது போக்கிற்கா?
இல்லை,
நான் படைக்கப்பட்டதை – நீ
மறந்துவிட்டாயா?
இரண்டில்
எது நடந்திருந்தாலும்

இங்கு
விதி விளையாடுவது
என் வாழ்க்கையில்
அல்லவா....!

ருத்ராசரன்

## விலகிடும் வேளையில்...

வளாக நந்தவனத்தில்
மலர்ந்த மொட்டுக்களே
வந்து சேர்ந்த சிட்டுக்களே!

வரும் போது நாம் யாரோ?
வந்த பின் பூந்தேரோ
போகும் போது கண்களில்
நீரோ!

படிக்கத்தான் வந்தோம்
பழகித்தான் கொண்டோம்
விலகித்தான் செல்ல
விருப்பம் தான் இல்லை
வேதனையைச் சொல்ல
வார்த்தைகளே இல்லை!

ஊரை மறந்து உறவை மறந்து
பெற்றதாயையும் மறந்து
வாய்விட்டு சிரித்த – அந்த
வளாக நாட்கள்
அழுது புரண்டாலும் - எமக்கு
அமையுமா மீண்டும் ஒருமுறை!

ஆக்கம் -
என். கோணேஸ்
4ம் வருடம்
கலைப்பீடம்.

# என் தாய்

உயிரோடு உறவாடும்
என் உயிரே தாயே!
ஜென்மம் ஏழும் வேண்டுமம்மா
உன் சொந்தமே!
என் கண்ணோடு கலையாத
கனவே தாயே!

காலமெல்லாம் வேண்டும்
உந்தன் கருணையம்மா!
ஒரு கணமும் கூட
என்னோடு பிரியாத நினைவே
தாயே!
தினம் செவிதனில் ஒலிக்குது
நீ பாடும் தாலாட்டே!

பாலூட்ட நீ மறந்திருந்தால்
இன்று நானாக நானில்லை
பாடம் சொல்லித்தர
இல்லையேல்
இந்த பட்டம் எனக்கு
சொந்தமில்லை
உன் அன்பு தனை நான்
இழந்தால்
இவ்வுலகுதனில் என் உயிர்
இல்லையம்மா தாயே!

தந்தை முகம் கண்டதில்லை
நான்
தமையன் தம்பி என்று
யாருமில்லை எனக்கு,
தந்தையாய் தமையனாய்
நீயம்மா
உன் உறவொன்றே எனக்கு
பேரம்மா

வேண்டும் வரம் தர தேவன்
உண்டு
தேவதையே!
தேவனை மிஞ்சிய தெய்வம்
அம்மா நீ எனக்கு

கண்ணை இமை காக்க
மறந்தாலும்
என்னை நீ
பார்க்க மறந்ததில்லை
நடமாடும் தெய்வமே!
நன்றி சொல்ல
வார்த்தையில்லை
உன் நன்றிக்கடன் நான்
தீர்க்க!
உன் மகளாய் ஜென்மம் ஏழும்
நான் பிறக்கவேண்டும் அம்மா
என் உயிரே! என் உயிரே!
நீதானம்மா அம்மா அம்மா!

ஊ. அனுசாங்கி
3ம் வருடம்
பொருளியல் சிறப்புக்கற்கை

# கண்ணெதிரே காணும் தெய்வம்.

அன்னையவள் மண்ணினிலே ஆண்டவனின் மறு உலகில்
வந்துதித்தாள் வையகத்தில் வளர்ந்ததுவே மனித இனம்

பத்து மாதம் தன் வயிற்றில் பக்குவமாய் எனைச் சுமந்து
வேதனையில் பெற்றெடுத்தாள் விருப்புடனே எனை வளர்த்தாள்
தந்தைதனை பறிகொடுத்து தனித்திருந்து எமை வளர்த்து
ஆளாக்கி விட்டாள் ஆசையுடன் என் அன்னை

தனது நோய் துன்பம் தனை தாங்கியே தனை வருத்தி
உழைத்தவள் எமை வளர்த்த உண்மையில் அவளே தெய்வம்
பள்ளியில் சேர்த்த அன்னை எம் படிப்பிலே ஆர்வம் கொண்டாள்
கல்வியில் நாங்கள் ஓங்க கஸ்ரங்கள் பல தாண்டி வந்தாள்

எத்தனை தடைகள் துன்பம் எத்தனை மனதில் சோர்வு
அத்தனையும் எதிர் கொண்டெம்மை ஆம் உருவாக்கிவிட்டாள்
கலைத்தேர்வில் பல்கலைக்கு தேர்வாகிவிட்டேன் என்ற
செய்தியை கேட்ட அன்னை சிந்திய மகிழ்ச்சி கண்டேன்

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோர் என
கேட்ட தாயின் உள்ளப்பூரிப்பை ஊரே தானறியும்
பெற்றவளின் கடன் தீர்க்க பிறவி பல போதாதாகும்.
அன்னையவள் அடி தொழுது அவழுக்கு சேவை செய்வோம்

அன்னைக்கு எம் மனதில் சிம்மாசனம் வைத்து
உட்காரச் சொல்லி அவள் உணர்வுகளை நாம் மதிப்போம்
பூமிக்கு அடுத்தபடி பொறுமைதனைக் காக்கும்
அன்னையின் பாதம் பணிந்து வாழ்வோம் வளம் பெறுவோம்.

ஆக்கம் -
பே. மாதவி
1ம் வருடம்.
கலை கலாசார பீடம்

*இளம்பரிதி*

# விதி வரைந்த கோடுகள்

கிழக்கு வானம் இரத்தச் சிவப்பேறியதாய் பறவைகளின் கொஞ்சல் இசையில் திகைக்கிறது. தன் கடன் பணி செய்து கிடப்பதே என கதிரவன் நீலக் கடலை கிழித்துக் கொண்டு எழுகிறான். ஓவ்வொரு விடியலும் வாழ்வின் விடியலின் நீட்சிதான் என்ற தத்துவம் உண்மையாகவே புலப்படுகிறது. காலை எட்டு மணி தாண்டியும் எழும்பாமல் ஒருவர் மீது ஒருவர் புரண்டு கொண்டு கிடக்கும் அந்த விடுதி வாழ்க்கையின் சுகங்கள் இப்போதெல்லாம் ஆனந்தனுக்கு பெரிதாகத் தெரிவதில்லை. ஏல்லோரையும் போல பல்கலைக் கழகத்துக்குள் பல கனவுகளுடன் வந்தவன் இன்று பிடிப்பின்றியே நடைபிணமாய் மாறிப் போனான். இந்த மாற்றங்கள் எதனால் ஏற்பட்டன என்பது அவனுக்குத் தானே தெரியும்? மாற்றம் தானே என்றும் மாற்றமில்லாதது.

ஆனந்தன் இந்த அளவுக்கு மாறிப் போனதுக்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. கிழக்கு மாகாணத்தில் எழில் கொஞ்சும் இயற்கை வளமும் கோணேசநாதரின் ஆசிகளுடன் வாழ்க்கை அமையப் பெற்ற இடம் திருகோணமலை. இம் மாவட்டத்தில் உள்ள மூதூர் என்னும் விவசாயக் கிராமத்தில் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன் ஆனந்தன். தந்தை பெரிய விவசாயி. பல நூறு ஏக்கர் வயல் நிலங்களில் தொழில் செய்பவர். காதல் திருமணம் செய்து பகவதியைத் தாரமாக்கிக் கொண்டார். மூத்தவன் ரமேஸ், இரண்டாவது மகன் சதீஸ், மூன்றாவதாகப் பிறந்தவன் ஆனந்தன். ஆனந்தனுக்குப் பின்னர் மூன்று சகோதரிகள். செல்வம் கொழித்த சண்முகத்தாரின் வாழ்க்கைக்கு பிள்ளைச் செல்வங்களும் குறைவில்லாமலேயே இருந்தன. தன்னால் படிக்க முடியாமல் போய்விட்டாலும் கூட தன் பிள்ளைகளை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என்ற எண்ணமும் தன்னைப் போல தன் பிள்ளைகள் வெயிற் குளித்து விவசாயம் செய்யக் கூடாது அரசாங்க உத்தியோகம் தான் பார்க்க வேண்டும் என்பதே சண்முகத்தாரின் ஆசையாகக் காணப்பட்டது. அதற்கேற்ப தம் பிள்ளைகளை நன்றாகப் படிப்பித்தார். மூத்தவன் ரமேஸீக்கு படிப்பை விட இயக்கச் செயற்பாடுகளிலேயே ஆர்வம் மிகுதியாகக் காணப்பட்டது. சண்முகத்தாருடனான அவர்களின் பல்வேறு கொடுக்கல்

வாங்கல் செயற்பாடுகள் அவர்களுடனான ரமேஸீன் தொடர்பிற்கு வழிவகுத்தது. இதன் முடிவு க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குச் சென்ற ரமேஸ் வீடு திரும்பவில்லை. சண்முகத்தார் எங்கு தேடியும் அவனைப் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. நடந்ததை ஊகித்தறிந்து கொண்ட சண்முகத்தார் அவனை வீட்டிற்கு அழைத்துவர எடுத்த முயற்சிகளும் கைகூடவில்லை.

சண்முகத்தாரின் "பொடியன் போன கதை" ஊரெல்லாம் பரவியது. முடிவாக இராணுவமும் வந்து விசாரித்து விட்டு எச்சரித்துவிட்டுச் சென்றது. சண்முகத்தார் நிலை குலைந்து போனார். மற்றப் பிள்ளைகளைக் கூப்பிட்டு உங்களின்ர அண்ணன் செய்த மாதிரி நீங்கள் யாரெண்டாலும் செய்வியலா இருந்தால் நான் உயிரோட இருக்க மாட்டன் நான் படுற வேதனைய பாத்துக் கொண்டு தானே இருக்கிறியல் என்று புலம்பினார். ஆனந்தனின் இரண்டாவது அண்ணன் நன்றாகப் படித்தான். அவனது படிப்பிலும் சில சில சமயங்களில் யுத்த நெருக்கடிகளால் தடங்கல்கள் ஏற்படத்தான் செய்தன. ஒருவாறு அவனுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவன் படிப்பைத் தொடரத் தொடங்கினான். மகன் பல்கலைக்கழகத்தில் படிக்கிறான் என்ற சந்தோசத்திலும், பெருமிதத்திலும் சண்முகத்தார் இருந்தார். சின்னவனான ரமேஸ் சண்முகத்தாருக்கு உதவி ஒத்தாசையாக இருந்து தன் படிப்பையும் கவனித்துக் கொண்டான். எப்போதாவது இரவில் ரமேஸ் வீட்டுக்கு வந்துவிட்டுப் போவதுண்டு.

சதீஸ் பல்கலைக்கழக கல்வியோடு காதலையும் நன்றாக்க் கற்கத் தொடங்கினான். கண்டியைச் சொந்த இடமாகக் கொண்ட ஒரு பெண்ணைக் காதலித்து வீட்டுக்குத் தெரியாமலே பதிவுத் திருமணமும் செய்து கொண்டான். சண்முகத்தாருக்கு ஊரில் எவ்வளவு மரியாதையோ அவ்வளவு மரியாதை வெளியிடங்களிலும் உண்டு. அவருக்குத் தெரியாத ஆட்கள் இல்லை என்று கூடக் கூறிவிடலாம். இரண்டாவது மகனின் காதலும் திருமணமும் தெரியவர அவனை வீட்டு வாசலை மிதிக்கக் கூடாது என்று தூக்கியெறிந்து விட்டார் சண்முகத்தார். ஊரவர்கள் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் ரோசக்கார மனுசன் அவற்றுக்குச் செவி சாய்க்கவே இல்லை.

சண்முகத்தாரைப் பொறுத்தவரை குடும்ப கௌரவத்துக்காக உயிரையும் கொடுக்கக் கூடிய மனிதர் அவர். பெற்ற தாய்,தந்தையை மதிக்காத பிள்ளை வீட்டில் இருந்தாலும் ஒன்றுதான் இல்லாவிட்டாலும் ஒன்றுதான் என்பது அவரது வாதம். பாவம் பெற்றவள் பகவதியம்மாவின் மனத்தின் வேதனை சண்முகத்தாரின் பிடிவாதத்தின் முன் தோற்றுப் போய் விடும்.

ஆனந்தன் மீது மிகுந்த நம்பிக்கை சண்முகத்தாருக்கு இருந்தது. தன்னோடு வயலில் இறங்கி வேலை செய்தவனுக்கு தான் படும் கஸ்ரங்கள் தெரிந்திருக்கும் அவன் இப்படியெல்லாம் செய்யமாட்டான் என்னும் அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்கு. அதைப் போலவே ஆனந்தனும் செயற்பட்டான். ஆனந்தனும் உயர்தரப் பரீட்சை எழுதி அவனுக்கும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. ஆனால் சண்முகத்தாருக்கோ ஆனந்தனை பல்கலைக்கழகம் அனுப்ப மனமில்லை. ஆனந்தா நீயும் அங்க போனால் உன்ர கொண்ணனைப் போல மாறிப் போயிருவாய் என்று பயமாக இருக்குடா நீ அப்பாவோடயே இரு அதுவே எனக்குப் போதும் எனச் சொல்லிப் பார்த்தார். இல்லப்பா நான் எப்பயும் உங்கட பிள்ளைதான் உங்கடமனம் நோக நான் நடக்கமாட்டன். கட்டாயம் நான் கெம்பஸில படிச்சு அரசாங்க உத்தியோகம் பார்க்கனும்ப்பா என்று கூறி சண்முகத்தாரிடம் அனுமதி வாங்கினான் அவரும் அரைமனதுடன் சம்மதித்தார்.

ஆனந்தன் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து மூன்று ஆண்டுகள் உருண்டோடின. சின்ன வயதிலிருந்தே உழைத்துக் களைத்துப் போன சண்முகத்தாரின் உடல் ஓய்வை வேண்டி நின்ற நிலையிலும் கவனிக்கப் படாமல் மூன்று பெண்களுக்கும் சீதனம் சேர்க்க வேண்டும், கெம்பஸில் படிக்கும் மகனுக்குக் காசு அனுப்ப வேண்டும் என்ற சிந்தனைகளுடன் சதாகாலமும் இரவு,பகல் பாராமல் வயலிலேயே கிடந்து முறிந்து போனார் சண்முகத்தார். ஓய்வின்றி உழைத்த உடல் சுயமாகவே ஓய்வெடுத்துக் கொள்ளத் தொடங்கிய போது சண்முகத்தார் படுத்த படுக்கையாகிப் போனார். சுறுசுறுப்பாக இயங்கித் திரிந்த சண்முகத்தார் கட்டிலில் கிடக்கலானார். கணவனின் பொறுப்பில் இருந்ததால் எதையுமே அறிந்திராது இருந்த பகவதியம்மா குடும்பத்தைக் கொண்டு

நடத்துவதில் நிலைகுலைந்து போனார். ஆனந்தனுக்கு செய்வது எதுவெனப் புரியவில்லை. படிப்பை விட்டுப்போட்டு அப்பாட வேலையச் செய்யலாம் என்றால் தந்தையின் ஆசைகள் நிராசையாகிப் போகக் கூடாது என்ற வெறி. அவன் கிழமை நாட்களில் பல்கலைக்கழகத்திலும் வார இறுதி நாட்களில் வயலிலுமாக சிரமப்பட்டு ஒருவாறு குடும்பத்தை ஓடச் செய்தான். தனக்குப் பின் படிக்கும் சகோதரிகளின் படிப்பைக் கவனிக்க வேண்டிய நிலை. பணச் செல்வாக்கோடு வாழ்ந்த குடும்பம் கௌரவம் கெடக்கூடாது என்ற நிலையில் காலம் ஓடிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தை பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவர இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. பாதைகள் மூடப்பட்டன. முன்னர் போல ஆனந்தனால் நினைத்தபடி வீட்டிற்குச்செல்லமுடியாத நிலை. விதைத்து அறுவடைக்குத் தயாராக இருந்த நிலங்களைக் கூட வெட்ட முடியாத நிலை, ஊரில் தாய்க்கும் சகோதரிகளுக்கும் பாதுகாப்பில்லை, அப்பாவோ கட்டிலில் படுத்த படுக்கை, கெம்பஸில் செலவுக்குப் பணமில்லை என்ற நிலையில் நிலைகுலைந்து போனான். இந்த நிலையில் தான் பிரியாவின் நட்புக் கிடைத்தது. பிரியாவுக்கு ஆனந்தனைப் பற்றிய அனைத்து விடயங்களும் தெரியவர அவள் உதவி செய்யத் துணிந்தாள். ஆனந்தனுக்கோ இந்த உதவியைப் பெறத் தயக்கம். ஒருவாறு அவ்வுதவியைப் பெற்று வீட்டிற்கு செலவுக்காக தெரிந்தவர்களிடம் பணத்தை அனுப்பினான். இந்த நட்பு நாளடைவில் காதலாக மாறியது. அது தேவையாகவும் இருந்தது ஆனந்தனுக்கு. மூதூர் பிரதேசத்தில் உக்கிரமாக மோதல் நடந்து கொண்டிருந்தது. மோதலில் தினமும் பலர் கொல்லப்படும் செய்திகளும் மக்கள் இடம் பெயரும் செய்திகளும் வெளியாகிக் கொண்டிருந்தன. ஆனந்தன் மூதூர் சென்று பல்வேறு சிரமத்தின் மத்தியிலும் தன் குடும்பத்தை மட்டக்களப்பு அகதி முகாமொன்றில் கொண்டு வந்து சேர்த்தான். அகதிமுகாமில் தன் குடும்பம் தினசரிச் சாப்பாட்டிற்கு படும் வேதனை அவனை தற்கொலைக்குக் கூட இட்டுச் சென்றது.பிரியாவின் ஆறுதல்கள் அவனைச் சமாதானப் படுத்தின. விடுதி வாழ்க்கையின் களியாட்டங்கள் இத்தகைய நிலையில் இருப்பவர்களைப் பாதிக்காமல் இருக்குமா? நாளடைவில் ஆனந்தனும் குடும்பத்துடன் முகாமிலேயே இரவுப்

பொழுதைக் கழித்தான். நாட்கள் ஓடத் தொடங்கி வாரங்களாயின. வாரங்கள் மாதங்களாயின. அகதி வாழ்க்கையின் சில மாதங்களிலேயே தந்தை சண்முகத்தாரின் உடல்நிலை மிகவும் மோசமாகியது. மருத்துவத்துக்குக் கூட நோய் கட்டுப்பட மறுத்துவிட ஒரு நாள் நித்திரையிலேயே அவர் நிரந்தரமாக உறங்கிவிட்டார். சண்முகத்தாரின் கடைசி ஆசை என்ர ஊரில் என்னை அடக்கம் பண்ண வேணும் என்பது தான் ஆனந்தனும் முயற்சி செய்து பார்த்தும் அந்த இடங்கள கிளியர் பண்ணாததால அங்கால போக ஏலாது என்ற முடிவே கிடைத்தது.

இறுதியாக சண்முகத்தாரின் உடலை எரித்து சாம்பலை எடுத்து முகாம் கொட்டிலின் மூலையில் கட்டி வைத்தான் ஆனந்தன். ஊருக்குப் போனதுக்குப் பிறகு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டான். இவை நடந்து நான்கைந்து மாதங்களின் பின் ஆனந்தனின் ஊரில் குடியேற்றப்பட்டனர். ஊருக்குச் சென்று குடும்பத்தினரை வளவுக்குள் கொட்டில் போட்டு குடியமர்த்தி விட்டு தந்தையின் இறுதிச் சடங்குகளை முடித்துக் கொண்டு தனது படிப்புக்காக பல்கலைக்கழக விடுதியிலேயே தங்கியிருக்கிறான் ஆனந்தன். அவன் ஊருக்குச் செல்லும் போதெல்லாம் சைன் வைப்பதும் ரியூட் எழுதிப் போடுவதும் பிரியாதான்.

நீண்ட நாட்களின் பின் இரண்டாவது அண்ணன் சதீஸின் தொடர்பு வெளிநாட்டிலிருந்து ஆனந்தனுக்குக் கிடைத்தது. நடந்தது எல்லாவற்றையும் தான் அறிந்ததாகவும் தன்னை மன்னித்து தன் உதவிகளை ஏற்றுக்கொள்ளுமாறும் அவன் கடிதம் போட்டிருந்தான். ஆனந்தன் தனக்குப் பின்னுள்ள தனது சகோதரிகளின் வாழ்க்கையை எண்ணினான்,தனக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் பிரியா, கோபுரத்தில் இருந்து இன்று குடிசையில் காலம் கழிக்கும் தன் தாயார் இவர்கள் எல்லோரது வாழ்க்கையும் தனது கைகளில் தங்கியிருப்பதை புரிந்து கொண்டான்.

அண்ணன் சதீஸிற்கு ஒரு மடல் எழுதினான். அண்ணா உன்னை மன்னிக்கும் நிலையிலும் அதற்கான பக்குவத்திலும் நான் இல்லை. எந்த பண உதவிகளும் எங்களுக்கு வேண்டாம். உன்னால் முடிந்தால் எவ்வளவு விரைவாக என்னை அங்கு எடுத்து விடுவாயோ அவ்வளவு

விரைவாக என்னை எடுத்துவிடு என்று கேட்டிருந்தான். சதீஸிம் மகிழ்ச்சியுடன் தம்பியை எடுக்க சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டான்.

ஆனந்தன் தன்னை நம்பியிருக்கும் ஜீவன்களுக்காக தனது தந்தையின் ஆசையை நிராசையாக்காமல் படிப்பை இடைநிறுத்தி 5வருடங்கள் உழைத்து தனது கடமைகளை நிறைவேற்ற வெளிநாடு செல்லக் காத்திருக்கிறான். நிச்சயமாக அவன் சண்முகத்தாரின் ஆசையை நிறைவேற்றுவான். பல்கலைக்கழக வாழ்க்கை தராத சோகமில்லை, இன்பமில்லை, சாய்ந்து கொள்ள தோள் கொடுக்கும் உண்மையான காதல்கள் இங்கே தான் இணைகின்றன என்பது ஆனந்தனின் மனநிலை.

ஆடிப்பாடித் திரிந்த இந்த வளாக பூங்காவின் ஒரு மரம் தன் சோகங்களை, துன்பங்களை புதைத்துக் கொண்டு எரிமலை போல அடக்கிக் கொண்டு திரிகிறது வெளிநாடு சென்று குழம்பு கக்கி பனியை உருக்கி சம்பாதித்து தனது குடும்ப கௌரவத்தை நிலை நிறுத்த....

முற்றும்

ச. கோபிரமணன்
3ம் வருடம்
கலைப் பீடம்.



# விச விருட்சங்கள்

முகத் தோப்பில்
அழகிய ஆடை கட்டி
மனித விருட்சங்களாக
நடமாடித் திரியும்
மனிதர்கள்.

இவர்களுக்கு
புற அழகு — மிக
அழகானது தான்
பார்வை பேச்சு
செயல் சிரிப்பு
அனைத்துமே
மிக அழகானவை.

இவ் விச விருட்சங்கள்
அசைந்தால்
மதிப்பும் மரியாதையும்
மண்டியிட்டு அமரும்,
கௌரவம்
தோப்புக் கரணம் போடும்,

அந்தஸ்து
ஊர்வலமாகச் செல்லும்,
நயவஞ்சகம்
நரிப் புத்தி என்பன
மனதில் நஞ்சாகும்.

தெரிந்து கொள்
இந்த
விச விருட்சங்களின்
நிழலும்
எம் மேல் படாதிருக்க
நாம்
தூரவிலகிச் செல்வது
புத்தி சாலித்தனம்.

ஆக்கம் -
ஆ. சுமதி
4ம் வருடம்
கலை கலாசார பீடம்



**கோணேஸ்**

# ஹைக்கூ கவிதைகள்.

## காத(லி)லன்
உலகிற்கு நீ யாரோ
யாருக்கோ உலகம் நீதான்.

## நட்சத்திரங்கள்
நிலாப் பெண்ணாள்
துருவி வைத்த
தேங்காய் துருவலை
யார்தான் நீல வானில்
சிதற விட்டாரோ.

## தேன்
கற்பிழப்பதில் களிப்புறும்
மலர்கள் வண்டுக்கு
செலுத்தும் காணிக்கை.

## அம்மா
பிறப்பின் போதே ஏற்படும்
பிரிக்கமுடியாத பிணைப்பு.

## சோகம்
கன்னத்தில் முளைக்கும்
கரிய தாடியல்ல
இதயத்தில்
சுரக்கின்ற கண்ணீர்த் துளி

## உப்பு
எதையும்
அளவுடன் வைத்துக் கொள்
எந்த நேரமும்
நினைவு படுத்தும் நண்பன்

## புகைத்தல்
இதுவும்
ஒரு தற்கொலை முயற்சிதான்.

## விதி
இழப்புக்களுக்கு மட்டும்
உச்சரிக்கின்றனர்
ஊரார் உன் பெயரை

## சூரியன்
மனித இனம் அனைத்திற்கும்
பொதுவானதொரு கடிகாரம்

ஆக்கம் -
அ. மைக்கல் தினேஸ்
1ம் வருடம்
வர்த்தக முகாமைத்துவ பீடம்



நாகரஜனி

# என் கனவில் அளிக்கப்பட்ட விருந்து

எரிந்து கிடந்த
மோட்டின் திரிபோல்
பிரிந்து கிடந்த
என் நேற்றைய
கனவை ஒட்டிப்பார்த்தேன்

அது ஒரு
பயங்கரக் கனவு

இரவின்
மயக்கத்தில்
என் கண்கள்
திமித்துக் கிடந்த
வேளையில் தான்
நான்
அந்தக் கனவைக் கண்டிருக்க
வேண்டும்

கதவைத்தட்டினார்கள்
அதிர்ச்சியில்
குரல் வரண்டு பிடித்தது

யாரென்று கூட
கேட்க முடியாதபடி

உள்ளே
வந்த அவர்கள்
நண்பர்களென்றார்கள்
கட்டாயப்படுத்தி
விருந்தொன்றுக்காக வரும்படி

வெளியே
அழைத்துச் சென்ற அவர்கள்
அந்நேரம்
மகிழ்ந்திருந்தார்கள்
என்னையே எனக்கு
விருந்து படைத்த
சந்தோசத்தில்

த. மேகராசா
4ம் வருடம்
கலைப்பீடம்.

# சிதைவுகளில் இருந்து சிறகு முளைத்தல்

வயிற்றில்
கரு சூல் கொள்ளாது
கர்ப்பம் சிதைந்து
அடிக்கடி கட்டி விழுந்து
துவாலை இறைத்து
நம்பிப்கை இழந்து கிடக்கும்
ஒரு தாயின் கர்ப்பப் பைக்குள்
நாற்றம் எடுத்துக்கிடக்கும்
சிறு இரத்ததுண்டத்தில்
இருந்து
கை கால் வீசி எழுகிறேன்
நான்

தொப்புள் கொடி கீழே
இழுபட்டு வர
தூர நடக்கிறேன்
துணிச்சலுடன்...........
அக்கினிகள் சூழ்ந்து
கொண்டிருக்கும்
என் காலத்துள் வாழ
நானும் ஒரு அக்கினிப் பந்தாய்
உருண்டு திரிகிறேன்

விலங்காயும்.......
பறவையாயும்....
மனிதனாயும்.....
அங்கங்கள் விரிய முகத்தில்
ஆண் குறியைத் தரித்துக்
கொண்டு
தலையில் வால் முளைத்து
அலைகிறது
என் உயிர்ப் பிண்டம்
நெருப்பைச் சப்பி
கரியைப் பீய்ச்சியும்
தாகம் அடங்காது எங்கும்
எதிரொலிக்கிறது
என் ஆன்மாவின் குரல்.........!

முகத்தில் இருக்கும்
என் ஆண் குறியில்
யோனியைப் பொருத்தி
என்னைப் பிரதி செய்யுங்கள்
ஒன்றாய்..........
நூறாய்..............
ஆயிரமாய்..............
அதன் பின் எந்தக்கரம்
என் குரல் வளையை நெரித்து
தலையில் மலம் கழிக்கிறது
பார்க்கிறேன்..............

நான் கர்ப்பம் தரித்த தாயும்
அவள்
கர்ப்பப் பையும் மட்டுமே
நம்பிக்கை இழந்தவை
சூல் சிதைந்து
நாற்றமெடுத்துக் கிடந்த
இரத்தப் பிண்டத்தில் இருந்து
கை கால் வீசி
எழுந்தவன் நான்...............

ப.சுஜந்தன்
4ம் வருடம்

# மனித ஜடம்

திடுக்கிட்டுத் திரும்பினேன்!
எங்கிருந்தோ முகாரி
ராகத்தின்
சோகச் சாயல்கள்!

உதிர்ந்து போன சருகுகள்
மெல்ல மெல்ல-
காற்றின் திசையிலே
இழுத்துச் செல்லப்பட்டு
நதியின் மடியிலே
வீசப்பட.........

காற்றிடம் உதிர் இலைகளை-
கடனெனப் பெற்ற நதிமகள்
தன் நீர்த்தரங்கக் கைகளால்,
அழுத்தித் தேய்த்தும்,
ஆட்டியசைத்தும்
சல்லடை போட்டுத்
தேடிக்கொண்டிருக்கிறாள்
அச்சருகினது
உயிர்த்துளியை!!

எப்போதோ விலகிய அவ்வுயிர்
மீண்டு வருமோ? என்ற
ஏக்கத்தின் விளிம்பு!
அந்த ஆதங்கத்தின்
பிரதிபலிப்பாய்
முயன்று தோற்ற நதி..........
முகாரி ராகம் பாடி
ஆற்றங்கரைச் சுடலையிலே
அடக்கம் செய்கிறது
உயிர் உதிர்ந்த
இலைகளையே!....

சடப்பொருளாம் அதற்கு மட்டும்
கனிவுள்ளம் வாய்த்திருக்க
மனிதர்களின் உள்ளம் மட்டும்
மரணித்து..........
மரத்துப் போய்...........
ஆம்! திடுக்கிட்டுத்
திரும்பினேன்!

ஓ! ....... வெற்றுடல்கள் மீது
மலர் மாலைகளாம்:
அழகு கொழிக்கிறதாம்!...........
-ஒரு மனித ஜடம்
நகைத்துக் கொண்டே
தயங்காது நவின்றது:
என் இதயமோ..........
இயங்காது ஸ்தம்பித்தது!!!.

அ.ஸயிந்தவி
இறுதிவருடம்
புவியியல் சிறப்பு

# விடியலுக்காக......

ஆர்ப்பரிக்கும் கடல் ஓசையின் நடுவில் நெடுநேரமாக யாரையோ எதிர் பார்த்துக்கொண்டு தீபன் கடற்கரையோரத்தில் காத்துநின்றான். இந்நிலையில் அவனது வாழ்க்கையில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அவனது வாழ்க்கையில் இடம் பெற்ற இன்பகரமான நினைவலைகளை நினைத்துக் கொண்டிருந்தான். அன்றைய நாள் அவனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நாளாக இருந்தது. O/L பரீட்சை முடிந்து பெறு பேறுகள் கிடைத்தது அன்று தான். A/L புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின. புதிய மாணவர்களின் வருகையை எதிர் பார்த்துக் கொண்டு இரண்டாம் வருட மாணவர்கள் காத்திருந்தனர். அவர்களில் தீபனும் ஒருவன்.

பெண்களை மயக்கும் அழகான விழிகளும் நீண்ட உயரமும்விரிந்த புயங்களை உடையவனும் புதுநிறத்தோற்றமுடையவனாகவும் தீபன் தென்பட்டான். அமைதியான பார்வையும் பெண்களுக்கே உரிய நாணமும் உடையவளாக தேவதை போன்று ஒரு பெண் தென்பட்டாள். அந்தப் பெண்ணை கண்டவுடனேயே தீபன் தன்னையே இழந்தான். அவளுடன் கதைப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தான். எதிர் பாராத விதமாக அவளுடன் கதைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. "ஹலோ என்னுடைய பெயர் தீபன். நான் உங்களிடம் கொஞ்சம் கதைக்கவேண்டும். உங்கட பெயர் என்ன? என்று தயக்கத்துடன் கேட்டான்.

"என்ர பெயர் சுவேதா" என்று அவள் பணிவாகவும் மெல்லிய குரலிலும் சொன்னாள். அதற்குத் தீபன் "உங்கட பெயர் ரொம்பவே நன்றாக இருக்கு. எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு" சுவேதா நான் உன்ன சந்தித்த முதல் நாளிலிருந்தே உன்னை காதலிக்க ஆரம்பிச்சிருக்கன். நான் உன்னை உயிருக்குயிராக காதலிக்கிறன் ப்ளீஸ் உன்னுடைய விருப்பத்தைச் சொல்லு என்றான். அவள் திடீர் என அதிர்ச்சி அடைந்தாள். அவளுக்கு என்ன சொல்லுவதென்றே தெரியவில்லை. அவள் அவ்விடத்திலிருந்து அழுது கொண்டே சென்றாள்.

மறு நாள் காலையில் சுவேதாவின் வருகையை எதிர் பார்த்துக்கொண்டு தீபன் காத்து நின்றான் சுவேதாவும் வந்தாள் "சுவேதா நில்லு உன்ர முடிவைச் சொல்லு என்றான். அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை அவள் தயங்கிய குரலில் இங்க பாருங்க தீபன் உங்களுக்கும் எனக்கும் பொருந்தாது என்னுடைய குடும்பம் இருக்கின்ற நிலையில் என்னால எந்த முடிவையும் எடுக்க முடியாது. தயவு செய்து என்னை தொந்தரவு செய்யாதேங்க என்று சொல்லிவிட்டு சென்றாள். அவனுக்கு உலகமே சுத்துவது போன்றிருந்தது. அதன் பின்பு இரண்டு மூன்று நாட்களாக தீபன் கல்லூரிக்கு வரவேயில்லை சுவேதாவிற்கு எதயோ இழந்த மாதிரி இருந்தது தீபனை நினைத்தபடியே சுவேதா நின்றாள். அந்த நேரத்தில் சுவேதாவின் நன்பி அனுஜா பதற்றத்துடன் ஓடி வந்தாள் "சுவேதா தீபன் வந்த வண்டி விபத்துக்குள்ளாகி கொஸ்பிற்றலில் அற்மிட் பன்னியிருக்காம் நீ உடனே வா போய்ப் பார்ப்போம்" என்றாள். சுவேதாவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை பயந்து கொண்டு கொஸ்பிற்றலுக்கு ஓடினாள் அங்கு மன்மதனைப் போன்று அழகாக இருக்கும் தீபன் இரத்தக் காயங்களுடன் கட்டிலில் படுத்திருப்பதைக் கண்டதும் சுவேதாவிற்கு அழுகை அழுகையாய் வந்தது. எல்லாவற்றிற்கும் தன்னுடைய பிடிவாதந்தான் காரணம் என நினைத்தாள். அவனுக்கு A+ பொசிட்டிவ் இரத்தம் உடனடியாக தேவைப்படுவதாக டாக்டர் கூறினார் உடனே சுவேதா "டாக்டர் என்னுடைய இரத்தமும் A+ தான் உடனே அவருக்கு செலுத்துங்க எப்படியாவது என்ர தீபனைக் காப்பாத்துங்க" என்று அழுதாள் சுவேதாவின் இரத்தம் தீபனுக்கு செலுத்தப்பட்டது. சிறிது நேரத்தின் பின்னர் தீபன் கண் விழித்துப் பார்த்தான் அப்போதுதான் சுவேதாவிற்கு நின்மதியாக இருந்தது. உடனே சுவேதா தீபனிடம் ஓடிப்போய் "தீபன் என்னை மன்னித்துவிடு நான் உன்னை உயிருக்குயிராய் விரும்பிறன் I LOVE U தீபன் I LOVE U என்றாள்.

அவனுக்கு அவனுடைய கண்களையே நம்பமுடியவில்லை. மிகுந்த சந்தோசத்துடன் துள்ளிக்குதித்தான். இவ்வாறு பழைய நினைவுகள் ஞாபகத்துக்கு வர "என்ன தீபன் நெடு நேரமாக என்னை எதிர்பார்த்திருக்கிறாயா" என்று கேட்டுக்கொண்டே வந்தாள். "ஆமாம் சுவேதா நான் ஒரு விடையம் பற்றி உன்னிடம் பேச வேண்டும். நீ

சம்மதிப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. இப்ப நம்மட நாட்டில நடக்கிறது உனக்கு தெரியும்தானே என்ர உயிருக்குக் கூட நாளைக்கு எதுவும் நடக்கலாம் அதால இப்போதைக்கு காதல் நமக்கு வேண்டாம் நாட்டில நல்ல நிலமை வந்த பிறகு உயிரோடு இருந்தால் சேருவோம் என்றான்.

சுவேதாவிற்கு சுனாமியே வந்தது போலிருந்தது. அவளால் நம்பவே முடியவில்லை. "என்ன சொல்றீங்க தீபன். உண்மையைத்தான் சொல்றீங்களா? என்னால நம்பவே முடியவில்லை" என்றாள். அதற்கு தீபன் "உண்மைதான் சுவேதா என்னை மன்னித்து விடு. நாடு நல்ல நிலமைக்கு வந்தால் நாமிருவரும் கல்யாணம் செய்வோம். அதுவரைக்கும் எனக்காக காத்திரு. என்றான் சுவேதாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒருவாறு அழுகையை அடக்கி மனதை சமாதானப் படுத்திக் கொண்டு தீபனிடம் இருந்து பிரிந்தாள்........

அன்றிலிருந்து சுவேதா தீபனை நினைத்துக்கொண்டே காலத்தைக் கழித்தாள். ஒருநாள் செய்தியறிக்கையில் தீபன் காணாமல் போனதாக அறிவிக்கப் பட்டது இதை அறிந்ததும் சுவேதாவிற்கு இடி விழுந்தது போன்றிருந்தது. அவளால் அழுகையை நிறுத்தமுடியவில்லை. அவளுடைய ஆசைகள் அனைத்தும் நிராசைகளாக மாறின. அவளுடைய கற்பனைக் கோட்டை இடிந்து விட்டதுபோன்றிருந்தது. என்றாவது ஒருநாள் இந்த நாட்டில் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் தீபன் உயிரோடு தன்னிடம் வருவான் என்ற எண்ணத்துடன் அந்த விடியலுக்காக அவள் என்றும் காத்திருக்கின்றாள்.

ஆக்கம் :-<br>சு.திருப்பதி<br>முதலாம் வருடம்<br>கலை கலாசார பீடம்

# நண்பர்கள்

எல்லா நண்பர்களும் "நாங்களும் உம் நண்பர்கள் என்பார்கள்"
சிலர்- பெயரளவில் மட்டும் நண்பர்கள்
பலர் நட்புக்காக உயிரைக் கொடுப்பவர்கள்- இதில் நீ யார்
உயிரைக் கொடுப்பவனா? - இல்லையேல்
பெயரளவில் வாழ்பவனா?

கண்ணைக்குத்திக் கொள்வோர் - கண்ணீரை வரவழைக்கின்றனர்
உள்ளத்தைக் குத்திக் கொள்வோர் உணர்ச்சியை
வெளிக்காட்டுகின்றனர்
பறவை மீது கல் எறிவோர் -அவற்றை அச்சுறுத்தி ஓட
வைக்கின்றனர்
ஆனால் நண்பர்களைப் பழிப்போரோ நட்பை முறித்து
விடுகின்றனர்

சில தோழர்கள் தங்கள் நண்பர்களின் உவகையில் மகிழ்வார்கள்
ஆனால் துன்பக்காலத்தில் எதிர்ப்பார்கள்
பல தோழர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக நண்பர்களுக்கு
உதவுவார்கள்
இருப்பினும் துன்ப காலத்தில்
அவர்களுக்கு தோள் கொடுப்பார்கள் இதில் நீ யார்
தோள் கொடுப்பவனா? இல்லையேல் - நண்பனை எதிர்ப்பவனா?

அ. சுபா பெர்ணான்டோ
4ம் வருடம் (புவியியற் சிறப்பு)

*இளம்பரிதி*

## பலிமேட்டில் காதலியைத் தேடிய ஒருவனின் குறிப்பேடு

நீ வருவதாகச் சொன்ன
நாளிகையை
என்
நாட்காட்டி
கிழித்துவிட்டது

நீ
இன்னும் வரவில்லை

நீயும்
நானும் இருப்பது
பலிமேட்டிலென்பதால்
உன் வரவின் வீக்கத்தில்
நான்
சந்தேகிக்கிறேன்

பலிமேட்டின்
குருதி ஊற்றில்
பிசுபிசுத்துப்பதிந்த
என் கால்களின்
விரல் இடுக்குகளில்னூடும்
உன்னைத் தேடிவிட்டேன்
பிணவாடையில்
மயானப்பேய்போல்
சிலிர்த்து நின்ற
என் காதில்
அப்போது ஏன் நீ
சொல்லமறுத்து நின்றாய்
உன் காலில் பிசுபிசுப்பது
நான்தானென்று.

த. மேகராசா
4ம் வருடம்
கலைப்பீடம்.



சிங்கத்தின் முகத்தில்
சிறுக்கியின் தேடல்
சிந்தும் பனித்துளி
அவள் தேகமெங்கும் சுகமாகும்
தேடலின் தொடர்ச்சி
உந்தன் கண்களுக்குள்!

காரையூர்
யசோ

இளம்பரிதி

# இரவுகளைப் பருகும் மதுக் கோப்பை

நேற்றய
இரவையும் இழந்து போனேன்...
மாலை
என் அறையில்
சில நண்பர்கள்...

இரவு தழுவிக் கொள்ள
சுற்றியிருந்து
முழு வட்டமாகியது கூட்டம்
வட்டத்தின்
முடிவுப் புள்ளி அல்லது
தொடக்கப் புள்ளியில் நானும்....

வட்டங்களை
இணைப்பதுபோல நடுவில்
மதுப் போத்தல்
இரவை விழுங்கும்
எண்ணத்தில்
மதுக் கோப்பை

என்
தலைக்கு மேலே நிலவு...
சில நட்சத்திரங்கள்
அறை முற்றத்தில்
பூத்துக் குலுங்கியபடி
மல்லிகைச்செடி..
கடைசியாய்
நான் ரசித்தவை...

கோப்பையில்
வழிகிறது அப்பாவின் வியர்வை
மதுவாய்...
மதுக் கோப்பையின்
விளிம்பைத்
தொட்டபடி நுரைகள்...

உற்றுப் பார்க்கிறேன்
எல்லா நுரைக் குமிழிகளிலும்
என் முகம்...
குமிழிகள் உடைந்து போக
முகங்களும் உடைந்து
கோப்பையில்
எஞ்சுகிறது மது......!

கசப்பை ஜீரணித்துக் கொண்டு
பருகிவிட
காலியாகிறது என்
மதுக்கோப்பை...
விரல் இடுக்குகளில்
எரிகிறது வாழ்க்கை...
சாம்பலாய்ச் சரிகிறது
எதிர்காலம்...

நேற்றைய இரவில்
எனக்குத் தெரிந்தவை
இவ்வளவுதான்....

இன்று காலை
விழித்துப் பார்த்தேன்.
சூரிய உதயம் என்னிலிருந்து
தப்பியிருந்தது....
நிலவு நட்சத்திரங்கள்
எவையுமில்லை....
நீள இரவை இழந்திருந்தேன்.
அறை முற்றத்து மல்லிகையும்
சில குரோட்டன் செடிகளும்

உயிரற்றுக் கிடந்தன...
அவசரக் குளியல்
அயன் செய்யாத ஆடை
என
பரபரப்போடு சென்றேன்..
வழமையாய்
வணக்கம் சொல்லும் தோழி
தலை குனிந்து சென்றாள்...
மதுக் கோப்பை
காலியாய் இருந்தது
இன்னுமொரு
இரவை
விழுங்கிக் கொள்ள

மு.செல்வகுமார்.
இறுதி வருடம்

## தொடரும் தட்டல்கள்

முன் பின் தெரியாதவன்
என் கதவுகளை தட்டுகிறான்.
என் வீட்டிற்கு வந்தவன்,
என்னிடமே கேட்கிறான்
தன் பெயரை.
யாரென நினைப்பதற்குள்
தண்டனையும் தருகிறான்,
தன்னை தெரியாதா எனக்
கேட்டு...
தன் நோக்கம் நிறைவேறியதாய்
மறு வீடு செல்கிறான்!
அங்கும் இப்படியே..........

அரை மணி கழித்து
அதே போன்ற தட்டல்.
ஆனால் அவனல்ல,
அவனிடமிருந்து என்னைக்
காக்க
அவன் போன பின்பு ஒரே
வருபவன்.
வழமை போல்,
"யாரும் ரூமுக்கு வந்ததா தம்பி"
வந்தது தெரியாதது போல்!!
"இல்லை சேர்" என்று
சொல்லி நிற்பேன்
அவன் எதிர்பார்த்த பதிலை...
இவனும் செல்வான் மறுவீடு!
அங்கும் இப்படியே.........

ஆறு மாதங்கள்!
அதே தட்டல், அதே கேள்வி
அதே தண்டனை – அதன்பின்
இன்றுதான் விடுதலை.
இன்று தட்டல்கள் ஓய்ந்தன,
தண்டனையும் ஓய்ந்தது.
அவர்களில் சிலர் – மீண்டும்
அலைந்து திரிகின்றனர்
புதுமுக வரவுகளிடம்,
அதே வினா தொடுத்திட
அலையும் அவர்களில்
ஒருவராய் நானும்!

ரீ.அருண்
(தவபாலன் அருண்மாறன்)
முதலாம் வருடம்,
வர்த்தக பீடம்.

# காதலா, நட்பா

காதல் மயக்கத்தில்
நான் நடை பயில
என் நண்பர் கூட்டம் அதை
வெறுத்திட
மத்தளமாய் நான் மாறி
இரண்டு பக்கமும் அடிவாங்கி
தவிக்கின்றேன்
காதலைக் கைவிடு சீர்கெட்டு
அலையாதே
அன்பான குடும்பம்
உனக்கில்லையா ...?
அழகான வாழ்வு உனக்கு
வந்தமையவில்லையா ....?
தோள் கொடுக்க நாமில்லையா?
காதல் வேண்டாம் அதை
தூக்கியெறி
காதலில் நீ வீழ்ந்தால்
நட்புனக்கு தேவையில்லை
நட்புனக்கு வேண்டுமென்றால்
காதலை நீ ஆதரிக்க
வேண்டியதில்லை
என்று கூறியே எனக்குத்
தடைகளிட்டனர்
எனக்கு என் காதல் வேண்டும்
என்னையே
உயிரென வாழும் நட்பும்
வேண்டும்
காதல் இன்றி நான் வாழ
முடியுமா
அந்த நினைவுகள் இன்றி நான்
இயங்க முடியுமா

நாளும் பொழுதும் நான்
வாழ்வது காதலில்
அதை தூக்கியெறிய ஆகாது
என்னால்
தொண்டையில் சிக்கிய
முள்ளாய் நட்பு
நெஞ்சில் இதயத் துடிப்பாய்
காதல்
காதலை நான் வெறுக்கவா?
நட்பினை நான் தொலைக்கவா
படிப்புக்கே விடை கொடுக்கவா
இல்லை என் வாழ்க்கையையே
முடிக்கவா
விடை தேட முடியவில்லை
இக் கேள்விக்கு விடை தர
முடியுமா உங்களால் பதில்தான்
சொல்லுங்களேன்
காதலை நான்
தோந்தெடுக்கவா
இல்லை
நட்புக்கு விடை கொடுக்கவா
காதலா......?
நட்பா......?

சர்மிளா தம்பிப்பிள்ளை

இளம்பரிதி

# மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!

நம் கன்னித் தமிழ் தாய் தந்த அரும் சொத்து தமிழ் நாடும் கவிச் சோலையிலே தான் எத்தனை விருட்சங்கள் எத்தனை விதமான விந்தைகள் அத்தனையும் கூறிட வாய்த்ததிந்த தமிழ்நாடு நமது பன் மொழிப் புலவரான பாரதியார் "தாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல இனிதாவது எங்கும் காணோம்."

என என்றோ உறுதியாக கூறியது முற்றிலும் உண்மையே. ஆதிகால வள்ளுவர்க்கும் அடுத்து வந்த கம்பர்க்கும் கவித்திறன் கொடுத்தது இந்தத் தமிழ் மொழி ஆகும். தமிழ் என்ற பதம் வண்டமிழ், செந்தமிழ், தீந்தமிழ், பைந்தமிழ் என்றெல்லாம் சிறப்பிக்கப் படுகின்றது. மொழியின் உருவாக்கம் எப்போது தோற்றம் பெற்றதோ. அப்போதே தமிழ் மொழியும் உருவாக்கம் பெற்றது எனலாம். ஒரு கவி உள்ளத்தின் உணர்ச்சி ஊற்றுக்களே உண்மைக் கவிதைகளாகும். கேட்பவர் உள்ளத்தில் உணர்ச்சி வெள்ளத்தை பெருக்கச் செய்யும் தன்மை தமிழ் மொழிக்கு உண்டு. காலம் காலமாக நாகரீகங்கள் கோமானாக மனிதன் வளர்ச்சி அடைந்து வந்த போதிலும் தமிழ் மொழியானது குறைவுத் தரத்தினை அடையவில்லை. எனினும் தமிழ் மொழியில் வடமொழிக் கலப்புக்களின் உருவாக்கமும் ஆங்கில மொழிகளின் பிரயோகங்களும் இணைக்கப்பட்டு விட்டன என்று கூற வேண்டும்.

மெய்யாம் நம் உடலால் வரும் இன்பம் பெரிதென்றால் அதைவிட நாவினன் சுவையால் வரும் இன்பம் உயர்வானது. நாசியால் வரும் சுகந்த வாசனை தரும் இன்பம் அதை விட இன்னும் உயர்ந்தது. நாசி நல்கும் நல்லின்பத்தைவிட நம் விழிகள் தரும் விந்தை மிகு காட்சி இன்பம் மேலும் உயர்ந்தது. ஆயினும் செந்தமிழ் தேனை சிந்தை களிக்குமாறு தரும் செவி இன்பமே அனைத்திலும் அதி உயர்ந்ததாகும். இங்கு செவி இன்பம் பெறும் சுவை கவி இன்பமாகிய தமிழ் மொழியால் மெருகூட்டப் பட்டதாகும். தனித் தமிழ் மொழியை தன் உயிர் மூச்சாகக் கொண்டு சுவாசிப்பவன் தமிழனாவான். ஆதலால் தான் பாரதிதாசன்

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனது மொழியாகும்
அன்பே அவனது வழியாகும்"

என்று பாடி வைத்தார். இவ்வாறு சிறப்பிக்கப்படும் தாய்த் தமிழை மதியாத பிறவிகளை நம் சான்றோர் இடித்துரைக்கும் வகையில்

"தன்னைப் பழித்தவனை தாய் தடுத்தால் விட்டுவிடு
தமிழை பழித்தவனை தாய் தடுத்தாலும் விட்டுவிடாதே"

என்கின்றனர். தமிழ் அன்னையின் தாய் வழித்தோன்றல்களான தமிழர்கள் தமிழின் அருமை பெருமைகளை நன்கு அறிந்தவர்களே. எனவேதான் இது வரையும் தமிழ்மொழி நிலைத்து நிற்கின்றது. மாற்றங்கள் ஏற்பட்டுவரும் நவீன உலகில் தமிழ் மொழியிலே மாறுதல்களை ஏற்படுத்த துடிப்பவர்களுக்கு ஓர் அறை கூவலாக அமையும் வகையில் பாரதிதாசனின் பாடல் வரிகள் அமைந்து காணப்படுகின்றன. இதனை

"சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும் – என்றன்
சாம் பல் தமிழ் மணந்து வேக வேண்டும்."

என்று உணர்ச்சி பூர்வமாக பாடியுள்ளார். இன்றைய உலகில் பல்வேறுபட்ட மொழிகள் காணப்பட்டாலும் தமிழ் மொழியில் செல்வாக்கு இன்றளவும் குறைந்து விடவில்லை. அன்றைய காலத்தில் சங்கங்கள் அமைக்கப்பட்டு தமிழ் வளர்க்கப்பட்டதற்கு காரணம் தமிழ் இன்பத்தினை செவியாறப் பருகுவதில் தீராத ஆர்வம் கொண்ட மன்னர்களும் அவைக்களப் புலவர்களுமே ஆவர். இவர்கள் கொடுத்த ஊக்குவிப்புக்களே பண்டைத் தமிழ சமூகத்தில் தமிழின் உன்னத வளர்ச்சியாகும். அன்று விதிக்கப்பட்ட எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்ட தமிழ் மொழி இன்று பரந்தளவில் கடல்கடந்த நாடுகளுக்கும் பரப்பப்பட்டுள்ளன. தெய்வத்திற்கு அடுத்த படியாக தெய்வத்தமிழைப் போற்றும் மரபு பண்டைய தமிழர் சமூகத்திடையே காணப்பட்ட ஒரு பண்பாகும். இவ்வாறு போற்றப்படும் போது

"எண்ணுறும் போது தமிழையே எண்ணீர்
இசைத்துழி தமிழையே இசைப்பீர்"

என்று எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கேட்கக் கேட்க சுவை குன்றாத தமிழ் மொழியானது அன்றும் இன்றும் என்றும் வளர்ச்சிப் படியில் நின்று சற்றேனும் தளம்பமாட்டாது என்பதில் ஐயமில்லை.

ரீ.வித்தியா,
முதலாம் வருடம். கலைகலாசார பீடம்

# முகவரி

என் விழிகளின் ஒவ்வொரு
துளிகளும்
முகம் தெரியாத உன்
முகவரியைத் தேடின...

விடியப் போகும் விடியலிற்காய்
என் இரவுகள்
விடியாமல் போனதுதான்
அதிசயம்

உன் முகவரி
ஒரு முற்றுப்புள்ளியற்றது
அது எனக்கு முதலடியாய்
விழுந்தது

என் உணர்வுகள் மரணித்துப்
போன
நிமிடம் என் கனவுகள்
கைகாட்டிவிட்டுக் கடந்தன

என் காதல் காலநிலையில்
எதிர்பாராத மாற்றம்
அந்த மாற்றத்தை ஈடுகட்ட
நான் ஒருத்தி
மட்டும் கல்லறையானேன்.

என் காதலுக்கு காரணமில்லை
உன் வாழ்விற்கு அர்த்தமில்லை
என் கல்லறைக்குள் மட்டுமே

உன் முகத்தை தேடுகின்றேன்
நான் இன்னமும்

ஒரு முற்றுப்புள்ளியுள்ள
முகவரியை உனக்காக....
என் காதல் அரிச் சுவடிகள்
அடையாளம் காட்ட மறந்தாலும்
என் இதய ஒலிகள்
உன் பெயரைமட்டும் தான்
சொல்கின்றன

என் காதலிற்கு கண்ணீர்
மட்டும் தான் என்பது
என் கல்லறையில்
கண்டுகொண்டேன்.

ஆனாலும் எனக்காக நீ
வருவாய் என்று
கல்லறையில் காத்திருக்கிறேன்.
உன் முகவரியுடன்

இப்போதுதான் தெரிந்தது...
உனக்கேற்ற முகவரி...
"காதல்" மட்டுமே என்று

ச.சபீதா
முதலாம் வருடம்
கலைப்பீரிவு

## சுகமான சுமை

மாலை மயங்குகின்ற அந்திப் பொழுது அது. வேலைக்குச் சென்று வந்த கணேஷ் வீட்டின் பின்புறமாகக் கதிரையைப் போட்டு உட்கார்ந்து கொண்டான். வீட்டின் முன் புறமாக ஓங்கி வளர்ந்து இருந்த வேப்ப மரத்தின் உச்சியினை சூரியனின் கதிர்க் கரங்கள் தடாவிக் கொண்டிருந்தது. குருத்துப்பச்சைநிற வேப்பம் இலைகளில் சூரியனின் பொன்நிறமான கதிர்கள் விழ அது ரம்மியமான நிறத்தினைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது. இவற்றை எல்லாம் பார்த்து ரசிக்காமல் கணேஷின் மனம் முன்னோக்கிச் சிறகடிக்கத் தொடங்கியது.

வீட்டில் கணேஷ்தான் இளையபிள்ளை, மூத்த இரண்டும் அக்காமார் திருமணமானவர்கள். தாய், தந்தையின் செல்லத்துடன் செல்லக்குட்டியாகவே வளர்ந்த கணேசுக்கு கஸ்டம் என்றால் என்ன நிறம் என்றே தெரியாது. படித்து முடித்துத் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தான். வேலை சுமூகமாகத்தான் போய்க் கொண்டிருந்தது.

அன்று ஒரு திங்கட்கிழமை இருக்கும் கணேஷின் நண்பன் முகுந்தன் “டேய் மச்சான் நம்மட ஆபீசுக்குப் புது வரவு ஒன்று வந்திருக்கிடா ஜோதிகா மாதிரியே இருக்கிறாள்டா.” என்று ஆர்ப்பரித்தான். அதற்குக் கணேஷ் “தொடங்கி விட்டான் சும்மா வேலையைப்பாருடா.” என்று கண்டித்தான். அன்று வேலை முடிந்து செல்லும் போதுதான் கணேஷ் அவளைக் காண நேர்ந்தது.

கணேஷ் தானே பிரமித்தான். தனக்கு ஏதோ நிகழ்ந்துவிட்டது என்று அன்றிலிருந்தே அவளைப் பற்றிய முழு விபரமும் திரட்டிக் கொண்டான். பெயர் துர்க்கா, தகப்பன் இல்லை, ஐந்தும் பெண் பிள்ளைகள், துர்க்கா மூன்றாவது பிள்ளை, மூத்த அக்கா மட்டும் திருமணமானவள், என்று எல்லா விபரமும் அறிந்து முடித்தான். துர்க்கா தனக்கே உரியவள் என்று முடிவெடுத்தே விட்டான். காலங்கள் நகர்ந்தன. தனது விபரத்தை தெரிவிக்க நாள் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நாளும் வந்தது.

அவளிடம் நேராகவே விருப்பத்தைத் தெரிவித்தான். சற்றும் எதிர் பாராதவிதமாக அவளும் “எனக்கும் உங்களை ரொம்பப் பிடிக்கும்” என்று கூறினாள். கணேஷின் சந்தோஷத்துக்கு எல்லையே இல்லை. உலகிலேயே தான் தான் ராஜா என்ற மாதிரி நடந்து கொண்டான். வீட்டிலும் சம்மதம் பெற்றுக்கொண்டான்.

துர்க்கா வீட்டில் பல கஸ்டங்களுடன் வளர்ந்தவள். மூத்த அக்கா திருமணமானவள், மற்ற யாரும் திருமணமாகாதவர்கள். ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்ற பழமொழியுண்டு. ஏற்கனவே ஆண்டியான இவர்களின் நிலை வறுமை தலைவிரித்தாடியது. தாய் வறுமையிலும் பிள்ளைகளைச் செம்மையாக வளர்த்தாள். ஐவரிலும் மிகவும் அழகானவள் துர்க்கா.

துர்க்காவின் மூத்த அக்காவின் கணவரின் தம்பி ஒருவன் லண்டனில் இருக்கிறான். அவன் அண்ணியைப் பார்க்க அன்று துர்க்காவின் வீட்டிற்கு வந்தான். வந்த பொழுது துர்க்காவைக் கண்ட அவன் நேரடியாகவே துர்க்காவின் அம்மாவிடம் துர்க்காவை தனக்குத் திருமணம் முடித்துத்தரும்படி கேட்டான். அம்மாவும் ஒரு பிள்ளையாவது வெளியில் அனுப்பினால் தான் மற்ற பிள்ளைகளைக் கரைசேர்க்கலாம். என்று எண்ணி கஷ்டநிலையின் காரணமாக சம்மதம் தெரிவித்துவிட்டார்.

அன்றிலிருந்து துர்க்காவின் வீட்டில் புயல் வீச ஆரம்பித்தது. படிப்படியாக வீட்டாருக்கும் துர்க்காவின் காதல் விடயம் தெரிய ஆரம்பித்தது. துர்க்காவிற்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. வீட்டாருக்கும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். முடிவில் அவளால் இயலாமலே போய்விட்டது. எப்படியாவது கணேஷிடம் சொல்லிவிட வேண்டுமென்று பெரும் பாடாகக் கூறி முடித்தாள். கணேஷ் ஒன்றும் பேசவில்லை, இடிந்து போய்விட்டான் அன்றில் இருந்தே அவன் பித்துப் பிடித்தவன் போல் அலைந்தான்.

தன்னை அறியாமலேயே அழுதுவிட்டான். கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் அவனின் கைகளில் விழ வழமைக்குத் திரும்பினான். நேரம் பத்து மணியைத் தாண்டியிருந்தது. எழுந்து வீட்டினுள் வந்தவன் சக்தி FM யைப் போட்டான். இதயராகத்தில் ரௌவ்வின் குரல் இதமாக ஒலித்துக் கொண்டிருந்தது. இதயராகத்தில் அடுத்த பாடலாக "போகுதே போகுதே என் பைங்கிளி வானிலே" என்ற பாடல் ஒலித்தது. அது காற்றின் வழியாகத் தவழ்ந்து கணேஷின் காதில் வேல் எனப் பாச்சியது. அப்பாடல் கூட அவனுக்கு ஒரு சுசமான சுமையாகத்தான் இருந்தது.

து.நாகராஜனி

*இராம்பரிதி*

# விடியலை நோக்கி

விடியலை நோக்கி செல்லும்
பாதை
வெகுதூரம் இல்லை...
விழித்தெழு! மனிதா,
விழித்தெழு!
கட்டாந்தரையிலே
கட்டெறும்பின் கடியினிலே
உறக்கமின்றித் தவித்த அகதி
வாழ்க்கையில் இருந்து
விடுபடும் காலம்
வெகுவிரைவில் உண்டு..
கண்ணிமைப் பொழுதில்
கலைந்து விடும் கனாபோல்..
கறைபடிந்த சுவடுகள் யாவும்
கழையும் காலத்தில்
உனக்கோர் புதியதொரு விடியல்
உண்டு...

தமிழன் என்று தலைகுனிந்த
காலம்
கட்டவிழ்ந்து
தைரியமாக தலை நிமிரும்
காலம்
உதயமாகும்...
அப்போது புதியதொரு விடியல்
உனை நோக்கி

அச்சம் என்ற மூலைக்குள்
முடக்கப்பட்ட மனிதா,
அந்நியனைப் போல
அடங்கியிருந்த காலம்
உனைவிட்டுப் போக

புதியதொரு விடியல்
காத்திருக்கிறது
உனக்காக....

மாண்டுவிட்ட மனிதரெல்லாம்
மீண்டெழுந்து வருவாரில்லை..
மரணித்து போன
மனித உறவுகளின் சுவாசங்கள்
ஏங்கித் தவித்த புதிய விடியல்...

உனக்கோர் விடுதலை
விடியலாக
உருவாகும் காலம்
வெகுவிரைவில் இல்லை.
உனக்காகவே
காத்திருக்கின்றது
புதியதொரு விடியல்...

அந்நாள் எந்நாள் என அறியத்
தவிக்கும் மனிதா,
அக்காலம் வரும்வரை
விடியலை நோக்கி
விழித்திரு......

தர்சா பாலசுந்தரம்
முதலாம் வருடம்
கலைகலாச்சார பீடம்

## ஆபிரிக்காவின் கோரிக்கை

நான் நீயல்ல
ஆனால்
நான் நானாக இருப்பதற்கு
நீ சந்தர்ப்பம் தருகிறாய் இல்லை

நீ
என் விஷயங்களில்
தலையிடுகிறாய்
ஏதோ அவை
உன் விஷயங்கள் போலவும்
நீ நான் போலவும்

நான் நீயாக இருந்தால்...
உனக்குத் தெரியும்
நான் நீயல்ல
என்றாலும்
நீ
என்னை நானாக இருக்க
விடுகிறாய் இல்லை

நான் நீயாகலாம்
உன்னைப்போல்
பேசலாம் நடக்கலாம்
சிந்திக்கலாம்
என எண்ணும்
உனக்கு புத்தியில்லை
உன் பக்கம் நியாயமில்லை

கடவுள் என்னை நானாகவும்
உன்னை நீயாகவும்
படைத்தார்
கடவுள் பெயரால் கேட்கிறேன்
என்னை
நானாக இருக்க விடு

ஆபிரிக்க கவிஞர் R.T Dempster